Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/984)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 30 திங்கட்கிழமை (17.10.2011) பக்கங்கள் 16 ஓசை - 17



ஆயுத கண்காட்சி நிலையம் 08



சாதனை நாயகி தனுஜா 07




மீன்களைப் பறிக்கும் கும்பல் 03



கல்விக்கு உதவி வழங்கத் தயார் 04

## புலிகளைத் தடை செய்யுமாறு நோர்வேயிடம் கோரிக்கை



(கொழும்பு)

புலிகளை தடை செய்யுமாறு நோர்வே அரசாங்கத்திடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. புலிகளை மீண்டும் தடை செய்வது குறித்து நோர்வே அரசாங்கம் மீண்டும் கவனம் செலுத்த வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜொஹான் கார் ஸ்ட்ரோ மற்றும் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் (15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவர் இனந்தெரியாதோரின் தாக்குதலில் படுகாயம்

### தாக்குதலைக் கண்டித்து விரிவுரைகள் பகிஷ்கரிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்குள்ளான நிலையில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று மதியம் 1.30 மணியளவில் கந்தர்மடம் பழம் வீதியில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு படுகாயமடைந்தவர் வவுனியா கனகராயன்குளம் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தவபாலசிங்கம் (வயது - 24) என்பவராவார்.

இச்சம்பவம் குறித்து மேலும் (15 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச உறவினை சீர்செய்ய அரசின் இருமுனை மூலோபாயம்

(கொழும்பு)

போர்க்குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக்கூறும் விவகாரத்தில் இலங்கையைத் தனிமைப்படுத்தும் முயற்சிகள் அனைத்துலக அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அரசாங்கம் அனைத்துலக உறவுகளில் இருமுனை மூலோபாயத்தைக் கையாள்வதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இதன்படி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சீனாவுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதுடன் அமெரிக்காவுடன் வழக்கமான உறவுகளை பேணி வருவதாகவும் அந்த வார இதழ் சுட்டிக் காட்டியுள்ளது.

புலிகளைத் தோற்கடித்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக கொழும்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கிற்கு விடுக்கப்பட்ட அழைப்பை, போர்க்குற்றச்சாட்டுகளைக் காரணம் காட்டி அமெரிக்காவும் பிரித்தானியாவும் நிராகரித்திருந்தன.

இந்தநிலையில் சீனாவின் உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழு இலங்கை கடற்படையுடன் நடத்திய பேச்சுகளில் கூட்டுக் கடற்படைப் பயிற்சி மற்றும் கண்காணிப்பை மேற்கொள்வதற்கு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

அதேவேளை அமெரிக்காவின் கடற்படைப் போர்க்கப்பலான யு.எஸ்.எஸ் போர்ட் கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை இலங்கையின் காலித் துறைமுகத்தில் தரித்து நின்றது.

துறைமுகங்களுக்கான வழக்கமான பயணத்தின் போது இந்தக் கப்பலின் மாலுமிகள் இலங்கை கடற்படையினருடன் இணைந்து கலாசார நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்றிருந்தனர். (15 ஆம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திர உறுதி சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஐக்கிய நாடுகளுக்கான பிரதி நிரந்தர பிரதிநிதி சவேந்திர சில்வா தமது இராஜதந்திரி வரப்பிரசாதத்தை அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தளபதி கேணல் ரமேஸின் மனைவி சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்க தென்மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இது கடந்த செப்ரெம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட்டது. இதனையடுத்து அவருக்கான அழைப்பாணை சவேந்திர சில்வாவின் தனிப்பட்ட வீட்டில் சேர்ப்பிக்கப்பட்டது.

இந்தநிலையில் அமெரிக்க இராஜாங்கத் (15 ஆம் பக்கம் பார்க்க)

## எத்தனை நாட்களுக்கு உயிருடன் கூட்டமைப்பு வாழப் போகிறது

### கேள்வியெழுப்புகிறார் வினோ எம்.பி.



(வவுனியா)

மக்களிடமுள்ள விமர்சனங்களைப் பார்க்கின்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தனை நாட்களுக்கு உயிருடன் இருக்குமென சந்தேகப்படவேண்டியுள்ளதாக கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோகராதலிங்கம் கூறியுள்ளார்.

தமிழ்க் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர், உப தலைவர்களுக்கான தலைமைத்துவப்பயிற்சி வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானபோது அதில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக் கோருவோர் குறித்த இறுதி முடிவை நானே எடுப்பேன்



(கொழும்பு)

என்னிடம் யார் வந்து பாதுகாப்பு கோரினாலும் அதற்கான இறுதி முடிவை நானே எடுப்பேன். இது தொடர்பில் யாரும் என்னை விமர்சிக்க முடியாது. என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மேயர்கள், பிரதி மேயர்கள், தலைவர்கள், உபதலைவர்கள் ஆகியோர் ஜனாதிபதி (15 ஆம் பக்கம் பார்க்க)

## நியாயம் குறித்த எதிர்பார்ப்புகள் மக்களிடம் அற்றுப்போயுள்ளது



(கொழும்பு)

சுயாதீன ஆணைக்குழு இயங்காமையால் மக்கள் மத்தியில் நியாயம் தொடர்பான எதிர்பார்ப்புகள் அற்றுப்போயுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மக்களை பொலிஸாரும், பொலிஸாரை மக்களும் கொலை செய்கின்றனர். அம்பாறையில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூர் அழைப்பாணைக்கும் பதில் அளிக்கப்படமாட்டாது

### சட்டமா அதிபர் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உள்ளூர் ஊடகங்கள் மூலம் அமெரிக்க நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டாலும், கூட அதற்குப் பதில் அளிக்கப்படாது என்று சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் கூறியுள்ளன.

படையினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் எனத் தெரிவித்து மூன்று தமிழர்கள் ஜனாதிபதிக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் நட்டஈடு கோரும் வழக்கு ஒன்றை சட்டவுாளர் புரூஸ் பெய்ன் ஊடாக தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கில் ஜனாதிபதியைப் பதிலளிக்கக் (15 ஆம் பக்கம் பார்க்க)

# வறிய மாணவர்களின் கல்விக்கு உதவிகளை வழங்கத் தயார்



(அச்சுவேலி)

கல்வியில் எமக்கு ஏற்பட்ட பின்னடைவை நீக்கக்கூடிய திறமை இன்றைய இளைய சமுகத்தினரிடம் தான் உண்டு என்பதை ஒவ்வொரு மாணவர்களும் உணர்ந்து கற்க வேண்டும். கல்வி என்பது வரையறையற்றது. இதற்கு இன, மத, மொழி என்ற எந்தவொரு வேறுபாடும் கிடையாது. அது மட்டுமன்றி வயது வேறுபாடு இன்றி அனைவரும் கற்றுக்கொள்ள முடியும். இருப்பினும், இளம் பராயத்தில் பெற்றுக்கொள்ளும் கல்விதான் ஒவ்வொரு பிள்ளையினதும் எதிர்காலத்தையும், நாட்டின் முன்னேற்றத்தினையும் நிர்ணயித்துக் கொள்கிறது.


கல்வியில் தனித்துவத்துடனும், திறமையுடனும் செயற்பட்டு வந்த எமது மக்களின் கல்வி நிலை இன்று வீழ்ச்சி கண்டு விட்டது. இந்நிலைக்குப் பல்வேறு பின்னணிக் காரணிகள் காணப்பட்டாலும், அவற்றையெல்லாம் மீறி மீண்டும் எமது கல்விப் பாரம் பரியத்தை தூக்கி நிமிர்த்த இளைய சமூகத்தினராகிய மாணவர்கள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். இதற்காக மாணவர்களின் கல்விக்காக வேண்டிய உதவிகளை வழங்குவதற்கு எனது நிறுவனமும் தயாராகவே உள்ளது. இவ்வாறு 'ரிவின் ஏ' மூவி நிறுவன இயக்குநர் க.செவ்வேள் ஆவரங்கால் விஷ்ணு வித்தியாலய பரிசுத்தின நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர் மத்தியில் தொடர்ந்து உரையாற்றுகையிலேயே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், பல பின்தங்கிய பிரதேச மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாது கஷ்ரப்படும் இவ் வேளையில் அவர்களுக்காகப் பல்வேறு கல்விச் சேவைகளை ஆற்றிவரும் எமது நிறுவனம் எதிர்காலத்திலும் இழந்துபோன எமது கல்வியை முன்னிறுத்தப் பல்வேறு பணிகளை மேற்கொள்ளும். எனவே கல்விக்காக உதவி தேவைப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களின் கல்விக்கு வழிகாட்ட பாடசாலைகள் பின்நிற்காது செயலாற்ற வேண்டும்.

எமது மாணவர்கள் பலர் ஆங்கில மொழியை வேற்று மொழியென ஒதுக்கி வைப்பதும், கடினமானதென ஒதுங்கி நிற்பதும் இன்றும் எமது மண்ணில் காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலை மாறவேண்டும். சர்வதேசத்திற்கு நிகராக எமது மாணவர்களும் சமகாலக் கல்வியில் உயர்ந்து நிற்கவேண்டும் என்றார். (103)

## வடக்கில் சுதேச மருத்துவம் அபிவிருத்தி செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)



வடஇலங்கையில் சுதேச வைத்தியசாலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது எமது உரிமை. அந்த உரிமையில் மருத்துவமனைகளுக்குத் தேவையான மூலிகைகளைப் பெற்றுக்கொடுத்து வளப்படுத்த வேண்டுமென லங்கா சித்த மருத்துவ அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க தெரிவித்தார்.

சித்த மருத்துவ டிப்ளோமா மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சித்த மருத்துவம், சுதேச மருத்துவம் இன்று வேறுபாடின்றி வைத்தியம் செய்ய வேண்டும். அத்துடன், ஆங்கில மருத்துவத்தைவிட சித்த மருத்துவத்தை சிறப்பாகக் கொண்டு செல்வதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் எனக் கூறியதுடன், வட இலங்கை சித்த மருத்துவக் கல்லூரியின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உதவியளிப்பதாகவும் உறுதியளித்தார். (எஸ்)

## நிலை தடுமாறியோர் வசமாக மாட்டினர்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

மேற்படி சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவரும் நிலைதடுமாறி வீதியில் விழுந்தனர். உதவிக்கு விரைந்து சென்ற பொலிஸார் மேற்படி நபர்களை மதுபோதையில் காணப்பட்டதை அவதானித்து அவர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர். (18)

## சங்கரத்தையில் வாகன விபத்து

(சங்கரத்தை)

நவாலி, சங்கரத்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 7.00 மணிக்கு இடம்பெற்றது. நவாலிப் பகுதியில் உள்ள சந்தியொன்றில் இ.போ.ச.பஸ் மற்றும் சிறிய ரக லொறி ஒன்று நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சிறிய லொறியில் பயணம் செய்த கே.கிரிசாந்தன் (வயது-26) என்பவர் கால் முறிந்த நிலையிலும், பெருவிரல் அகற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (எப்.எஸ்)

## வாசிப்பு மாதக் கட்டுரைப் போட்டி

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் பொது நூலகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்படும் கட்டுரைப் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு சரசாலை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் 1, 2, 3, 4 பிரிவு மாணவர்களை உரிய நேரத்திற்கு வருகை தருமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (உ-11)

## தவறிவிழுந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

உழவு இயந்திரம் ஒன்றில் பயணம் செய்த நபர் தவறி விழுந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு காயமடைந்தவர் வத்திராயன் வடக்கு, தாளையடியைச் சேர்ந்த ஏ.கிருஸ்ணகுமார் (வயது-31) என்பவரே சிகிச்சை பெற்று வருகிறார். (எப்.எஸ்)

## மலிவு விற்பனை

(மல்லாகம்)

மல்லாகம் சதாசகாய அன்னையின் ஆலயக் கட்டடப் பணிக்காக மாபெரும் மலிவு விற்பனை கடந்த செப்ரெம்பர் 23, 24, 25 ஆம் திகதிகளில் அல்வாய், சக்கோட்டை புனித பிரான்சிஸ்க சவேரியார் ஆலய முன்றலில் நடைபெற்றது.

அல்வாய், சக்கோட்டை புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயப் பங்குத் தந்தை மற்றும் ஆலயப் பங்கு மக்களின் ஏற்பாட்டில் இம் மலிவு விற்பனை நடைபெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (38)

## வீதி அபிவிருத்தியும் பருவ மழையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறை வீதி பல இடங்களில் பழுதடைந்து போக்குவரத்துக்கு உதவாமல் இருந்து வருகிறது.

தாவடிக்கப்பால் வீதியை அகலிக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தாவடியிலிருந்து யாழ்.நகரம் வரை திருத்தப்படாமல் உள்ளது. குறிப்பாக நாச்சிமார் கோவிலடி, தட்டாதெருச் சந்தி, யாழ். இந்துக் கல்லூரியடி, பண்டிக்கோட்டு பிள்ளையார் கோவிலடி, சிவன் கோவிலடி, பெரியகடை மற்றும் சத்திரச் சந்தி ஆகிய இடங்களில் குழிகள் தோன்றியுள்ளன.

பருவப் பெயர்ச்சி மழையினால் ஏற்படும் வெள்ளம் இவ் வீதி யால் பயணிப்பவர்களுக்குப் பல அசௌகரியங்களை ஏற்படுத்தும் என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தாவடியிலிருந்து தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானம் வரை வீதி அகலிப்பு பணியானது பருவமழை மேலும் தீவிரமடைந்தால் பின்னடைவு ஏற்படலாம் எனவும், இதனால் யாழ்-காங்கேசன்துறை போக்குவரத்தில் பாதிப்புக்கு உள்ளாகலாம் எனவும் அபிவிருத்திப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். (39, 68)

## கொடும்பாவி எரிப்பு

(ஆனைக்கோட்டை)

மழையை வேண்டி நவாலிப் பகுதி இளைஞர்களால் நேற்று முன்தினம் இரவு கொடும்பாவி எரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி இளைஞர்கள் ஒன்றிணைந்து கொடும்பாவியை இழுத்துச் சென்று வயலில் போட்டு எரித்தாகவும், இதன் பின்னர் மழை பெய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சுன்னாகம் நூலகத்தில் விசேட வாசிப்புக்கூடம்



(சுன்னாகம்)

ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதம் அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு வலிகாமம் தெற்குப் பிரதேசசபை சுன்னாகம் பொது நூலகத்தில் விசேட வாசிப்புக் கூடத்தை ஒக்டோபர் 1 முதல் ஒக்டோபர் 31 வரை வாசகர்களுக்கு ஏற்படுத்தி யுள்ளது.

இக்காலப்பகுதியில் மாணவர்கள் மத்தியில் நூலகப் பயன்பாட்டை, வாசிப்பை ஊக்குவிக்கும் செயற்பாடாக இப்பிரதேசத்தைச் சார்ந்த 14 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் பாடசாலை அதிபரின் ஊடாக விண்ணப்பப் படிவத்தை நிரப்பி இலவசமாக அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை நூலகத்தினதும், தனிப்பட்ட நூலகங்களைப் பேணிவரும் இயல்வாணன், ரமேஷ், கணேசராசா, ஸ்ரீ காந்தலக்சுமி ஆகியோரதும் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் விசேட வாசிப்புக் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய நூலக ஆவணமாக்கல் சபையால் சுன்னாகம் பொது நூலகம் 2009 ஆண்டு வடக்கு மாகாணத்தின் சிறந்த நூலகமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 2011 ஆம் ஆண்டு மாவட்டத்தின் சிறந்த நூலகமாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம் : துவாரகன்)




சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி நேற்றுமுன்தினம் சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகத்தின் ஏற்பாட்டில் ஊர்வலமொன்று நடைபெற்றது. இந்த ஊர்வலமானது, சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க முன்றலிலிருந்து ஆரம்பமாகி சுன்னாகம் நகரப்பகுதியைச் சுற்றிவந்த பின்னர் மீண்டும் காங்கேசன்துறை வீதி வழியூடாக வாழ்வகத்தைச் சென்றடைந்தது.

இதில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார பிரதம விருந்தினராகவும், சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.குமாரவேலு சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஏதோ ஓரிடத்தில் அளவற்ற நேர்மையும், அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

- விவேகானந்தர்-

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அவதூறுகளும் அரசியல் லாபமும்

“கள்ளக் காதலால் அடி வாங்கிய ஊடகவியலாளர் சுவிற்ஸர்லாந்தில் அரசியல் தஞ்சம்” என்றொரு தலைப்பிலான செய்தியை பல இணையத்தளங்களில் பார்க்க முடிந்தது. “தமிழ்த் தேசிய நாளிதழ் என மகுடம் சூடிக் கொண்ட யாழ்ப்பாணப் பத்திரிகையின் ஊடகவியலாளர்கள் இருவர் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டனர் என அண்மைய நாட்களில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டு வந்தன. ஆனால் இதன் உண்மைத் தன்மை என்ன? எதற்காக இவர்கள் தாக்கப்பட்டனர் என அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதுவும் தெரியாது.

காலையில் பத்திரிகை பார்த்து விட்டு “வயிற்றுப் பிழைப்புக்காகப் பேப்பர் கொம்பனியில வேலை செய்யுறதுகளை ஏன் உந்தக் காடேறிகள் அடிக்கிறாங்கள்” என்று எத்தனையோ தமிழ் மக்கள் மனம் கலங்கியிருப்பார்கள்? அத்தனை தமிழ் மக்களையும் ஏமாற்றி விட்டு அடுத்த கணத்தில் சுவிற்ஸர்லாந்துக்கு விமானத்தில் பறந்தனர் இந்த ஊடகவியலாளர்கள்” என்று நீள்கிறது அந்தச் செய்தி.

சமய பாடம் கற்பிக்கும் ஆசானாகவும், பகுதி நேரத்தில் பத்திரிகையிலும் பணிசெய்து கொண்டிருந்த அந்த ஊடகவியலாளர், தான் கற்பிக்கும் மாணவியிடம் காதல் லீலை புரிய, மாணவியின் உறவினர்கள் அவரை இந்துக்கல்லூரி அருகே வீதியில் வைத்து முழங்காலுக்குக் கீழ் தாக்கினர். இத் தாக்குதல் சம்பவத்தைப் பிரமாண்டமாக மெருகூட்டி தமக்கு எதிரான ஓர் அரசியல் கட்சி மீது குற்றஞ் சாட்டி எழுதியது அவர் பணிபுரிந்த அந்தப் பத்திரிகை.

காயத்துடன் மருத்துவமனையில் படுத்திருக்கும் படத்தை வெளியிட்டுப் பத்திரிகை ஒருபுறம் தனது அரசியலை நடத்த, மறுபுறம் இதைப் பயன்படுத்தி அந்த ஊடகவியலாளர் சுவிஸ் நாட்டுக்கு விசா எடுத்துள்ளார். தற்போது சுவிஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் கோரி வாழ்ந்து வருகின்றார். இதைத்தான் ஒரு கல்லில் இரு மாங்காய் விழுத்துவது என்பதா?

இது இவ்வாறிருக்க, சிலநாட்களிலேயே அந்தப் பத்திரிகையின் செய்தியாசிரியரும் நாவலர் வீதியில் வைத்து இனந்தெரியாதவர்களினால் தாக்கப்பட்டு, அதையும் அப்பத்திரிகை தனது அரசியலுக்கு வெளிப்படையாகவே பயன்படுத்தியது. தனது போட்டி அரசியல் கட்சியைப் போட்டுத் தாக்குவதற்கு இதை ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக்கொண்டு ஆர்ப்பாட்டத்தை நடத்தி எதிரான கோஷங்களை மிகையாக வெளிப்படுத்தி தொடர்ச்சியான நாடகங்களை அரங்கேற்றியது. அந்தச் செய்தியாசிரியரும் இப்போது சுவிஸ் நாட்டில் தஞ்சம் கோரி, குடும்பத்துடன் அங்கு செட்டிலாகி விட்டார்.

எத்தனையோ பேர் வெளிநாடுகளுக்குத் தஞ்சம் கோரிச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஊடகவியலாளர்களும் அவ்வாறு செல்வதில் நாம் விமர்சிக்க எதுவுமில்லை. ஆனால், இதற்காக சில பழிகளையும் நாடகங்களையும் தொடர்ந்து நடத்துவது குறித்தே நாம் விசனமுடன் நோக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் உண்மைகள் எல்லாம் வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்த பிறகும், அவை குறித்து ஒரு சொல்லையும் வெளியிட்டு விடாமல், தொடர்ந்தும் அடுத்த அரசியல் பழிசுமத்தலுக்குக் காத்திருக்கும் ஊடகதர்மம் என்னவென்பதையே நாம் கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது.

இப்போது இணையத்தளங்களில் வெளியிடப்படும் சந்தேகம் என்னவென்றால், தாக்குதல்கள் நடப்பதும், பிடிக்காத எதிர் அரசியல் கட்சி மீது பழிசுமத்துவதற்கு இது பெரும் எடுப்பில் பயன்படுத்தப்படுவதும், பிறகு காதல் பிரச்சினையிலோ தனிப்பட்ட விவகாரங்களினாலோ ஏற்பட்ட தாக்குதல் என்று தெரியவருவதும், ஆனால் அதுபற்றி சம்பந்தப்பட்ட பத்திரிகை கண்டுகொள்ளாதிருப்பதுமான இந்த தொடர்நிகழ்வுகள்... இந்தத் தாக்குதல்களோடு குறித்த அப்பத்திரிகை நிர்வாகத்திற்கும் தொடர்புகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றன. அத்தோடு எவ்வளவு பணம் பெற்றுக்கொண்டு இந்த சுவிஸில் தஞ்சம் கோர வைக்கும் நாடகம் நடத்தப்படுவதாகவும் கேட்டுள்ளன. இதுதான் அரசியலைச் சாக்கடையாக்குவது என்றும் அவை விமர்சிக்கின்றன.

சங்கிலியன் சிலை விவகாரத்திலும், பழைய பூங்கா விவகாரத்திலும் கூட பெருமளவுக்கு இட்டுக்கட்டிய செய்திகளை வெளியிட்ட பத்திரிகைகள், பிறகு தெரிந்த உண்மையை வெளியிட வேண்டும் என்ற பத்திரிகா தர்மத்தைப் பற்றிக் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளவில்லை. அவர்களினது தேவையெல்லாம் எதிர் அரசியலாளர்கள் மீது முடிந்தளவுக்கு அவதூறுகளைச் சிருஷ்டித்து வீசுவதும், மக்களைப் பரபரப்புக்குள்ளாக்கி வியாபாரம் நடத்துவதுமேயாகும் என்று இப்போது வெளிவரும் செய்திகளை நம்ப வேண்டியிருக்கிறது.

- ஆசிரியர்

# சமூகத்திலுள்ளவர்கள் அனைவரும் விழிப்புலனற்றோரை மதிக்கவேண்டும்

## விழிப்புலனற்றோர் சங்க ஸ்தாபகர்

(யாழ்ப்பாணம்)

எமது சமூகத்திலுள்ளவர்கள் அனைவரும் விழிப்புலனற்றவர்களை புறந்தள்ளி விடாது அவர்களுக்குள் இருக்கின்ற திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிக்கொணர்வதற்கு முக்கிய பங்காற்ற வேண்டும் என விழிப்புலனற்றோர் சங்க ஸ்தாபகர் ஆ.விஜயராஜசிங்கம் தெரிவித்தார்.

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கையில் 40 வருடத்திற்கு மேலாக வெள்ளைப் பிரம்பு வாரத்தினை கொண்டாடி வரும் விழிப்புலனற்றவர்களை நாம் கௌரவிக்க வேண்டும். மக்களிடையே வெள்ளைப் பிரம்பின் முக்கியத்துவம் பற்றிய கருத்துக்களை நாம் கொண்டு செல்ல வேண்டும்.

விழிப்புலனற்றவர்கள் இன்றய காலத்தில் கல்வியிலும் சரி வேறு திறமைகளிலும் சரி மற்றவர்களுடன் சமநிலையில் இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

அந்த வகையில் இன்று விழிப்புலனற்றவர்கள் 24 பேர் பல்கலைக்கழக பட்டதாரியாகவும் 9 பேர் பட்டப்படிப்புக்களையும் மேற்கொண்டும் வருகின்றனர்.

இந்த வகையில் எமது சமூகத்தில் உள்ளவர்கள் விழிப்புலனற்றவர்களை தங்களுடன் இணைத்துக் கொள்ள விரும்புவதில்லை. எதிலும் அவர்கள் புறம்பானவர்களாகவே நோக்கப்படுகிறார்கள் இந்த நிலைமை மாறவேண்டும். அவர்களை மதிப்பளிக்க வேண்டும்.

இவர்களுக்கு யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகம் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது இந்த உதவிகள் தொடரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(உ,எஸ்)

# கடற்தொழிலாளர்களின் மீன்களை மூதூரில் பறித்துச் செல்லும் கும்பல்

(கொழும்பு)

இரவு நேரங்களில் கடலுக்குச் சென்று வரும் மூதூர் மீனவர்களின் மீன்களையும் கடல் உணவுகளையும் கடந்த மூன்று நாட்களாக இனந்தெரியாத கும்பலொன்று பறித்துச் செல்வதாக மூதூர் பொலிஸ் நிலையத்தில் நேற்று மீனவர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனிக்கிழமை இரவு மீனவர்களினால் மூன்று வள்ளங்களில் கொண்டுவரப்பட்ட சுமார் 1,500 கிலோ நிறையுடைய கணவாய் மீனை கத்தியைக் காட்டி மிரட்டி அபகரிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர

அவ்வாறே நேற்று இரவும் ஒரு வள்ளத்தில் கொண்டுவரப்பட்ட சுமார் 11 கிலோ அறக்குலா மீன்களையும் மற்றுமொரு வள்ளத்தில் கொண்டு வரப்பட்ட சுமார் 50 கிலோ பாரை மீன்களையும் இன்னுமொரு வள்ளத்தில் கொண்டுவரப்பட்ட 30 கிலோ கணவாய் மீன்களையும் இனந்தெரியாத கும்பல் அபகரித்துள்ளதாக மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் 119 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தென் மாகாணத்தில் தென்னைத் தொற்று நோய்

(கொழும்பு)

தென் மாகாணத்தில் 35 ஆயிரம் தென்னை மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டுள்ளது. அந்தப் பிராந்தியத்தில் அபாயகரமான ஒரு வகை நோய்த்தாக்கம் ஏற்பட்டதனை அடுத்து ஏனைய தென்னைகளுக்கு பரவுவதை தடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென் மாகாணத்தில் உள்ள வெலிகம மிதிகம தெனிபிற்றிய மற்றும் மாத்தறை ஆகிய பிரதேசங்களிலேயே இந்த தென்னைத் தொற்று இனம் காணப்பட்டுள்ளதாக தெங்கு ஆராச்சி நிலையம் தெரிவித்துள்ளது. இந்தத் தொற்று காரணமாக இந்த வருட மொத்த தேங்காய் உற்பத்தியில் 6 சத வீத பாதிப்புகள் ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை தற்போது நாடளாவிய ரீதியாக 290 கோடி தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வெட்டப்பட்ட 35 ஆயிரம் தென்னை மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்களை நட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# காரைநகர் விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்

## பிரதேச சபை உறுப்பினர் கண்ணன்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச விவசாயிகள் எதிர்நோக்கும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை தொடர்பான பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படும் என காரைநகர் ஈ.பி.டி.பி அமைப்பாளரும் காரைநகர் பிரதேச சபை உறுப்பினருமான கண்ணன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேசத்தை சேர்ந்த 5 விவசாய சம்மேளனங்கள் நேற்று முன்தினம் காலை குறித்த பிரதேச சபை உறுப்பினருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர்.

இதில் கடந்த தினங்களில் இடம்பெற்ற அபிவிருத்திக் கூட்டங்களில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை தடுத்து நிறுத்தி நெற்செய்கையை மேற்கொள்வது தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப் படாமையால் அதனை வலியுறுத்தி எதிர்காலத்தில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்வது தொடர்பாக விவசாய சம்மேளனங்கள் கலந்துரையாடியதுடன் இது தொடர்பான மனுக்களை கையளித்தனர்.

அவற்றைப் பெற்றுக் கொண்ட அமைப்பாளர் இது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கலந்துரையாடி பிரச்சினைக்குரிய தீர்வினை பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார்.

இப்பிரச்சினை குறித்து ஏற்கனவே அமைச்சர் கூறிய ஆலோசனைப்படி தனியாரின் மேற்பார்வையின் கீழ் கட்டாக்காலி மாடுகளை வளர்க்க நடவடிக்கை எடுப்பதாகவும் இதற்கு தற்காலிக நிதியாக $2^1/_2$ இலட்சம் ரூபாவை அமைச்சர் ஒதுக்கியுள்ளதாகவும் அவர் இச் சந்திப்பில் தெரிவித்தார். (எப்,எஸ்)

## கடல் உணவுகள் பதனிடும் நிலையம்

(வேலணை)

வேலணை துறையூரில் பாசிக் நிறுவனத்தின் அனுசரணையுடன் வலுவிழந்தோருக்கான மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடல் உணவு பதனிடும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தினூடாக வலுவிழந்தவர்கள் பெரும் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# முதியவர்களின் அனுபவங்கள் வாழ்வை முன்னேற்ற உதவுகிறது

### மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம்

(யாழ். நிருபர்)

முதியோர்கள், சிறுவர்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழவேண்டும். பெரியவர்களின் அறிவுரைப்படி சிறுவர்கள் நடந்துகொள்வது அவர்களை வாழ்க்கையில் உயர் நிலைக்கு இட்டுச் செல்லும் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ருபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்ட சர்வதேச சிறுவர், முதியோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிர்தேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

இன்று எமது பிள்ளைகளுக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி போன்ற நீதி நூல்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இவ்வாறான நீதி நூல்கள் சிறுவர்களை நல்வழிப்படுத்த உதவக் கூடியவை. முதியோர்களின் அனுபவங்கள் மிகவும் பெறுமதியானவை. அவர்களின் அனுபவங்களைப் பெற்று நாம் வாழ்வில் முன்னேற வேண்டும்.

மேலை நாடுகளில் முதியவர்கள் கௌரவப் பிரஜைகளாக கவனிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குத் தேவையான வாழ்வாதார வசதிகள் அங்கே வழங்கப்படுகின்றன.

எமது நாட்டிலும் முதியோர்களுக்கான உதவித் திட்டங்கள் தற்போது ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சுகாதார முன்னேற்றம் காரணமாக எமது நாட்டில் முதியவர்கள் நீண்ட காலம் வாழ்க்கூடியதாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், முதியோர்களுக்கான பரிசுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (10)

## காசுக்கான வேலைத்திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் டனிஸ் அகதிகள் பேரவையினால் காசுக்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் வீதிகள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், கழிவு நீர் வாய்க்கால்கள் என்பனவற்றைப் புனரமைக்கும் வகையில் கிராம மக்களை ஒன்று திரட்டி அவர்களைக் கொண்டு இவ்வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதில் இந்த மக்களின் ஒருவருக்கு நாட்கூலியாக 700 ரூபா வீதம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-கே)

## சிறுவர் தின விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினவிழா எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் 30 முன்பள்ளிச் சிறார்களும், ஆசிரியர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

முன்பள்ளி ரீதியாக உடுவில் பிரதேசத்தில் நடத்தப்பட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் பங்கேற்ற சிறார்களும், ஆசிரியர்களுமே இவ்வாறு கௌரவிக்கப்படவுள்ளனர். (06)

## இடநெருக்கடி காரணமாக சேதமடையும் சைக்கிள்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்தில் தற்போது துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால், இங்கு பொதுமக்கள் தாம் நிறுத்தி வைக்கும் துவிச்சக்கரவண்டிகள் சேதமடைவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தச் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியின் மேற்குப் புறத்தில் உள்ளது.

திறந்த வெளியில் அமைந்துள்ள இந்த பாதுகாப்பு நிலையத்தில் துவிச்சக்கரவண்டிகள் பாதுகாப்பாக விடப்படுகின்றபோதிலும் தற்போது இந்தப் பாதுகாப்பு நிலையத்தின் ஒரு பகுதியில் [illegible] சல கூடம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதனால் துவிச்சக்கரவண்டிகள் நிறுத்தி வைப்பதற்கான இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால், தற்போது ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக துவிச்சக்கரவண்டிகள் சேதமடைகின்றன. எனவே, இது தொடர்பாக உரியவர்கள் கவனம் எடுக்கவேண்டும் என பொதுமக்களும், அரச ஊழியர்களும் கேட்டுக்கொள்கின்றனர். (39)

## இணைப்புகள் வழங்கப்பட்டும் மின்சார விநியோகம் இல்லை

### வித்தியாபுர மக்கள் கவலை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் பகுதியில் மின் சார விநியோகத்திற்கான மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை மின்விநி யோகம் வழங்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் மின்சார சபையினால் மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இப்பகுதிகளிலுள்ள அரச நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களுக்கே மின்சார விநியோகம் வழங் கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தமக்கும் இந்த மின்சார விநியோகத்தை வழங் கினால் பாடசாலை மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஏதுவதாக இருக்கும் என பொதுமக்கள் தெரிவிக் கின்றனர்.


இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதி காரிகள் கவனம் எடுத்து இப்பிரதேச மக்களுக்கு மின்சார விநியோகத்தைப் பெற்றுத் தர ஆவண செய்யுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (உ-101)

### சித்திரப்போட்டியில் முதலிடம்

(யாழ். நிருபர்)

மாகாண மட்டத்தில் நடைபெற்ற சித்திரப் போட்டியில் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலய மாணவன் ரமேஷ் சயுவண்ணன் மாகாண ரீதியில் முதலிடம் பெற்றுளார்.

இவர் சித்திரக் கலையில் சிறந்து விளங்கியதை இனங்கண்ட சித்திர ஆசிரியர் எஸ். ஜீவராசா அதிபர் இ. சுபத்திராதேவி ஆகியோர் தகுந்த முறையில் சிறப்பான பயிற்சி வழங்கிப் போட்டியில் வெற்றியீட்ட வழிப்படுத்தியுள்ளனர். (10)






கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இலங்கை வங்கியின் அனுசரணையில் நடைபெற்ற குத்தகை அடிப்படையிலான வாகனச் சந்தை நிகழ்வில் இலங்கை வங்கி தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க வாகனச் சந்தைக்கான ஆரம்ப நிகழ்வை நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும், வாடிக்கையாளர் ஒருவருக்கு திறப்பினை வழங்குவதையும் காணலாம். (77)

## வலிகாமம் வலய மட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட வலய மட்ட விஞ்ஞான விநாடி வினாப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளதாக விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். விஜேந்திர சர்மா அறிவித்துள்ளார். இப்போட்டியில் ஒவ்வொரு தரத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

**ஆங்கில மொழி மூலம்:**

தரம் 6: ரி. ரேணுஜன் (மகாஜனாக் கல்லூரி), எஸ். மதுஹரி (விக்ரோரியாக் கல்லூரி), ஜி. சங்கிராணி (யாழ்ப்பாணக் கல்லூரி)

தரம் - 7 : எல். சிறிகர்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி), கே. வினோஜன் (மகாஜனாக் கல்லூரி), ஆர் கரன் (விக்ரோறியாக் கல்லூரி)

தரம் - 8 : வி. சிவப்பிரகாஸ் (விக்ரோறியாக் கல்லூரி), இ. கஜராணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), கிறிஸ்ரின் தேவமிர்தா (உடுவில் மகளிர் கல்லூரி).

தரம் - 9 : ஆர். கார்த்திகாயினி, பி. ஐங்கரன் (விக்ரோறியா கல்லூரி), எம். தாரணியா (மகாஜனாக் கல்லூரி)

தரம் 10 : எஸ். விருதிகா (உடுவில் மகளிர் கல்லூரி), பி. பிரவிந்த் (யாழ்ப்பாணக் கல்லூரி), ரி. தாரணி (விக்ரோறியாக் கல்லூரி)

தரம் 11 : ரி. விஜிதா (விக்ரோறியாக் கல்லூரி), ஏ. பாலமுரளிகிருஷ்ணா (யாழ்ப்பாணக் கல்லூரி), கிறேஸ் ஏஞ்சலின் சிவகுரு ஜோசப் (உடுவில் மகளிர் கல்லூரி).

**தமிழ் மொழி மூலம்**

தரம் - 6 : ரி. குகதாஸன், கே. துவஷ்ஜா (உடுவில் மகளிர் கல்லூரி), கே. சஜீத்தா (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்). ப. கிருஷாந்த் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

தரம் 7 : ரி. சாரூகா (உடுவில் மகளிர் கல்லூரி), கே. அபர்ணா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ரி. நுர்மிளா (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்).

தரம் 8 : ரி. கேசிதா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ். ஜனனி (யாழ்ப்பாணக் கல்லூரி), ஜி. யசோதா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

தரம் 9 : எஸ். சுரேஷ்குமார் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), கே. காருண்யா உடுவில் மகளிர் கல்லூரி), எம். நிவேனிகா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

தரம் 10 : எஸ். நவநீதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), எஸ். தேனுஜா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ். ஆரமுதன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

தரம் 11 : அல்பேட் மேரி மெலிசியா (சில்லாலை ஆர்.சி.ரி.எம்.எஸ்.), கே. கௌசிகன் (மகாஜனாக் கல்லூரி), என். சிவஞானச்செல்வன் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி). (06)

## புனரமைக்கப்பட்டு வரும் அச்சுவேலி வல்லை வீதி

(அச்சுவேலி)

அச்சுவேலி வல்லை வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமான இவ்வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாதிருந்த நிலையில் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் திருத்தப்பட்டிருப்பதனால் பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் பெரிதும் பயனடைந்துள்ளனர். மேலும் அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியை அண்டிய பிரதான வீதியின் பல பகுதிகள் மழை நீர் தேங்கி நிற்பதனால் தற்போதைய மழை காலத்தில் பொதுமகக்ள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே, பொதுமக்கள் மற்றும் சாரதிகளின் நலன் கருதி இப்பகுதியையும் திருத்தியமைக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் என பொதுமக்கள் ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர். (03)

## இடி தாங்கியை அமைக்குமாறு ஒட்டுசுட்டான் மக்கள் கோரிக்கை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடி தாங்கியொன்றை அமைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது பருவ மழை ஆரம்பித்துள்ள நிலையில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பிரதேசங்களில் கடும் இடியுடன் கூடிய மழை பெய்வதால் இடி விழும் என்ற அச்சநிலை தோன்றியுள்ளதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, அச்சநிலையைப்போக்கும் வகையில் இப்பிரதேசத்தில் அவசியம் இடிதாங்கி அமைக்கப்படவேண்டும் என இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (உ-101)

# இலவச ஆயுர்வேத வைத்தியசாலைக்கு நயினாதீவில் அடிக்கல் நாட்டல் நிகழ்வு



ஆயுர்வேத சிகிச்சை முறையை கடைப்பிடிப்பவர்களில் தீவக மக்கள் முன்னிலை வகிப்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

நயினாதீவு இலவச ஆயுர்வேத வைத்தியசாலையின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உபஅலுவலக வளாகத்தில் வேலணை பிரதேச சபையின் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் வேலணை பிரதேச அமைப்பாளருமான சிவராசா (போல்) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் இயற்கையில் கிடைக்கின்ற மூலிகைகளைக் கொண்டு வழங்கப்படுகின்ற ஆயுரவேத சிகிச்சையில் நம்பிக்கை வைத்து சிகிச்சை பெறும் மக்களில் அதிகமானவர்களும் இந்த தீவகத்திலேயே உள்ளனர். அதே போன்று நீண்ட ஆயுளுடன் வாழும் மக்களாகவும் இந்த தீவக மக்கள் காணப்படுகின்றனர்.

எனவே தற்போது புதிதாக அமைக்கப்படவுள்ள இலவச ஆயுர்வேத வைத்தியசாலைக்கான கட்டடம் இப்பிரதேச மக்களுக்கு நல்லதொரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் எனக்கு நம்பிக்கையுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உபஅலுவலக வளாகத்தில் 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள இலவச ஆயுர்வேத வைத்தியசாலையின் கட்டடத்திற்கான அடிக்கல்லினை பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சுதேச மருத்துவத்துறை அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் ஆகியோர் நாட்டி வைத்தனர்.

தொடர்ந்து நிகழ்வுகளில் ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) வேலணை பிரதேச சபை உறுப்பினரும் ஈ.பி.டி.பி.யின் நயினாதீவு பிரதேச அமைப்பாளருமான கருணாகரகுருமூர்த்தி கடற்படை கட்டளை அதிகாரி றியல் அட்மிரல் ஆர்.சி. விஜயகுணரத்ன நயினை நாகபூசணி அம்மன் தேவஸ்தான பிரதம குரு பால கணேசக் குருக்கள் நயினாதீவு விகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸநரயக்க தேரர் யாழ் மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் பிரதேச சபை அலுவலர்கள் கிராம அலுவலர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுனர் தாமோதரம்பிள்ளையின் பிள்ளைகளான சரா மற்றும் சிறிகுமார் ஆகியோர் கல்லூரியின் பாவணைக்கென பேருந்து ஒன்றை கல்லூரி அதிபர் அ.கயிலாயப்பிள்ளையிடம் கையளிப்பதைக் காணலாம். (11)

# இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கான விசேட புதிர் வினாடி வினாப் போட்டி

(பருத்தித்துறை)

வடமாகாண ஆளுநரின் வழிகாட்டலின் கீழ் விசேட புதிர் வினாடிவினாப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் தரம் 9, 10 மாணவர்களுக்கும் தரம் 12, 13 மாணவர்களுக்கும் என இரு பிரிவுகளாக ஒவ்வொரு பிரிவிலும் தலா 6 மாணவர்களைக் கொண்டதாக நடத்தப்படவுள்ளது.

இதில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம், சமூக விஞ்ஞானம், மொழி, கலைத்துறை, பொது அறிவு, வாழ்க்கைத் தேர்ச்சி போன்ற விடயங்கள் தொடர்பான வினாக்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

குறித்த தரங்களைச் சேர்ந்த சகல மாணவர்களுக்கும் பாடசாலை மட்டத்தில் எழுத்துப் பரீட்சையாக நடத்தி அதில் ஒவ்வொரு பிரிவிலும் தலா 6 மாணவர்களைத் தெரிவு செய்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கோட்டக்கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

இப்போட்டிகள் கோட்டம், வலயம், மாவட்டம் மாகாணம் என 5 மாவட்டங்களில் வினாடி வினாப் போட்டியாக நடத்தப்பட்டு இறுதிப்போட்டி பொதுமக்கள் முன்னிலையில் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பாக நடத்தப்படும்.

இதில் கோட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி வட இந்து மகளிர் கல்லூரியிலும், வலய மட்டப் போட்டிகள் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு அதே பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

மாவட்டப் போட்டிகள் அடுத்த வருடம் ஜனவரி மாதமும் மாகாண மட்டப் போட்டிகள் அடுத்த வருடம் மார்ச் மாதமும் நடைபெறும். இதில் தரம் 12, 13 மாணவர்களுக்கான போட்டிகள் பொதுச் சாதாரண பரீட்சையை தழுவியதாக இருக்கும் என வடமராட்சி வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (உ-109)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(17.10.2011–திங்கட்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம்

புரட்டாதி 30 ஆம் நாள்.

இராகுகாலம் 7.32–9.02, சுபநேரம் 12.02 –1.32,

நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.இ.5.57 வரை

திதி: பஞ்சமி பி.ப. 3.58 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்ப நிலை, வீண் கோபம், சகோதர பாசம், அவசர முடிவு.

ரிஷபம:– குடும்பத்தில் கவலை, பணம் வரும், காரிய சித்தி, தொழில் விருத்தி, உறவுகள் ஆதரவு.

மிதுனம் :–காசுக்கஷ்டம், குடும்பத்தில் மகிழ்ச்சி, காரியத்தடை அவசரமுடிவு, வாக்குவாதம்.

கடகம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம வரும், உடல் சுகம்பாதிப்பு, மருத்துவச் செலவு, நினைத்ததைச் சாதித்தல்.

சிம்மம்:– காசுக்கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், வைத்தியச் செலவு, வீண் அலைச்சல், மனச் சஞ்சலம்.

கன்னி :– குடும்பத்தில் மகிழ்ச்சி, காசுவரும், புதுப்பொருள் சேரும், நண்பர் உபத்திரவம், மனமகிழ்ச்சி.

துலாம் :–காசுக்கஷ்டம், குடும்பத்தில் மகிழ்ச்சி, வீணான செலவு, அயலவர் பகை, அதிகாரப் போட்டி.

விருச்சிகம்:– சுபகாரியப் பேச்சு, காசுவரும், வீண் அலைச்சல், வசதிக் குறைவு, அவசர முடிவு.

தனுசு:– காசுவரும், சுற்றத்தார் ஆதரவு, அயலார் தொல்லை, பதுப்பொருள் சேரும், சகோதரபாசம்.

மகரம:– குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், வசதிக்குறைவு, அயலார் பகை, தேகம் சோர்வு

கும்பம் :– காசுவரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, சுப காரியப் பேச்சு, அதிகாரிகள் சினம், நினைத்ததைச் சாதித்தல்

மீனம் :– குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், வீண் கோபம், அதிகாரப் போட்டி, தேகசுகம் பாதிப்பு.

# விவசாயிகளுக்கான மானிய உரம் வழங்கல்


(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான மானிய உரம் கமநல சேவை நிலையத்தினால் வழங்கப்பட்டு வருகிறது.

காலபோக செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் இந்த உரம் வழங்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள மகிழக்காடு, பெரிய பரந்தன் ஆகிய பிரதேசங்களில் நெற்செய்கையை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய விவசாயிகளுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கமநல சேவை நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது (உ-கே)




எதிர்மறை விசயங்கள் பல சுவாரஸ்யமாக அமைவதுண்டு அதேவேளை அதற்கு எதிர்மறையாக அமைந்து பயங்கர விளைவுகளையும் உருவாக்குவதுண்டு.

நான் சொல்லப்போற எதிர்மறை விசயம் பயப்படாதேங்கோ சுவாரஸ்யமாகத்தான் இருக்கும்.

எனக்குப் பேத்திமாரை விடப் பேரன்மார்தான் கூட! அதில மகளின்ர பொடியள் மூத்தது ரெண்டும் ஒத்துப்போகாதுகள்.

அப்புடியும் சொல்லேலா ஏனெண்டா செக்கலுக்கை படிக்கிற நேரங்களில கடைதெருவுக்கு ஏதும் வாங்கமறந்திட்ட சாமான்களை வாங்குவிக்கிறேண்டா மட்டும் ஒற்றுமையா ரெண்டு பேரும் கிளம்பீடுவாங்கள்.

பத்து நிமிசததில முடிச்சுக் கொண்டுவாற வேலையை ரெண்டு பேருமாப் போனாங்களெண்டா அரை மணித்தியாலம் பிடிக்கும்.

என்ன செய்யுறாங்களோ ஒண்டும்தெரியாது ஏனெண்டா நாங்க பின்னால போறேல்லத்தான?

தனித்தனிய விட்டா பந்து சுவரில பட்டுத்திரும்புற மாதிரி வந்திடுவாங்கள்! செக்கலுக்கை என்டா உந்த கிறீஸ், மர்ம மனிசனைச் சாட்டி ரெண்டு பேரும் வெளிகிட்டுவிடுவாங்கள்!

இதுல இன்னொரு களவு இருக்கல்லே. பாடம் படிக்கிற நேரத்தைக் கடத்துற விளையாட்டு. இது கனநாளாப் புடிபடேல்ல பிறகு புடிபட்டுட்டுது.

எண்டாப்போல அவுங்களுக்கே வேறை வேறை யுத்திகளைச் சொல்லிக் குடுக்க வேணும்.

அண்டைக்கு மானம்பூ வாளைவெட்டு நடந்த நாளன்று பின்னேரம் படிக்கிற நேரம் ஆரம்பிக்கிறதைப்பாத்து பெரியவன், சின்னவனை எதுக்கோ துரத்திக்கொண்டு வந்தான்.

ஓடிவந்தவன் தான் இளையவன் விழுந்து படுத்திட்டான். பாடம் படிக்கிற நேரம், செபம் சொல்லுற நேரமெல்லாம் கடந்தும் எழும்பேல்ல.

எனக்கு விழங்கீட்டுது உவன்ர சாட்டை! எல்லாம் கவனிச்சுக் கொண்டிருந்தனான் தானே. அன்றிரவு கழிஞ்சு மறுநாள் காலை. நான் விசயத்தைப் போட்டுடைச்சன்.

ஏனெண்டா உவனை உப்புடியே விட்டா இந்தத் தந்திரத்தைத்தான கையாளுவான் எண்ட எண்ணத்தை முறியடிக்க வெல்லே வேணும்

அதைக் கிணத்தடியில நிண்டு கேட்டுக் கொண்டவன் என்ன சொன்னான் தெரியுமே!

எனக்கு தட்டீட்டெண்டான், நான் விடுவனே ஓமடா நேற்று மானம்பூ வாழை வெட்டெல்லே? உருமாறி வாழையா நிண்ட மகுடாசுரனை சரஸ்வதி வாழையை வெட்டி மடமையை அது தான் கல்வி அறிவு இல்லாமையை அகற்ற வாழை வெட்டிய போது அதிலிருந்து வெளியேறிய மகுடாசூரன் உன்னிலை வந்து ஏறிக்கொண்டான்.

அதிலதான் அங்க வாழைவெட்டு நடக்கிற நேரம் வந்து விழுந்தனி எழும்பேல்ல எண்டு மடக்கினன்.

அதோட விடேல்ல. பாத்தியா எங்கட தெய்வங்கட வீரத்தை? அவன் வந்து உன்னிடம் பூரேக்க உங்கட கிறிஸ்து தடுக்க முடியேல்லப் பாத்தியா எண்டன்.

அவனுக்கு பதில் சொல்லத் தெரியேல்ல ஆனா வீட்டில நிண்ட என்ர மனிசி மகள் ஆகியோர் முணுமுணுத்தினம் ஏனெண்டா அவை புதிசா உந்தக் கிறிஸ்து சபையில சேந்தவை.

உப்புடி வீட்டுக்கு வீடு எதிர்மறைச் சுவாரஸ்யங்களும் நடந்து கொண்டுதான் இருக்கு. அது சுவாரஸ்யமாக இருக்கும் வரை நல்லது பாருங்கோ!

## வடமாகாண நவோதயா பாடசாலைகள் விளையாட்டு

# மெதடிஸ்த பெண்கள், நானாட்டான் ம.வி. முதலிடம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண நவோதயா பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், ஆண்கள் பிரிவில் மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயமும் முதலிடங்களைப் பெற்றுள்ளனர்.

வடமாகாண நவோதயாப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நிறைவடைந்தது.

மூன்று தினங்கள் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் 23 பாடசாலைகளைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்குகொண்டனர்.

இதில் ஆண்களுக்கான கிரிக்கெட், கரப்பந்து, பெண்களுக்கான வலைப் பந்து, கரப்பந்து மற்றும் ஆண் பெண்களுக்கான அஞ்சலோட்டம் போன்ற போட்டிகள் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டிகளும், மூன்றாமிடத்திற்கான போட்டிகளும் நேற்றைய தினம் இடம்பெற்றது.

ஆண்களுக்கான 8 ஓவர் கிரிக்கெட் போட்டியில் நெல்லியடி ம.வி., அல் அஷார் ம.வி. அணியும் இறுதிப் போட்டியில் மோதின. இதில் முதலில் ஆடிய நெல்லியடி ம.ம.வி. 9 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய அல் அஷார் ம.வி. அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் நெல்லியடி ம.ம.வி. சம்பியனானது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மன்னார் நானாட்டான் ம.வி. முதலிடத்தையும், வவுனியா இந்துக் கல்லூரி இரண்டாமிடத்தையும், ஸ்ரான்லிக் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டது.




முதலிடங்களைப் பெற்ற பாடசாலைகள் வடமாகாண கல்விப் பணிப்பாளரிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டபோது...

வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், வட்டு இந்துக் கல்லூரியும் மோதின. இதில் 33-13 என்ற புள்ளிகள் அடிப்படையில் பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை வெற்றிபெற்று சம்பியனானது. இதில் மூன்றாமிடத்தை ஸ்ரான்லிக் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் பருத்தித்துறை பெண்கள் கல்லூரி முதலாமிடத்தையும், நெல்லியடி மத்திய ம.வி. இரண்டாமிடத்தையும், மீசாலை வீரசிங்கம் ம.வி. மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

15 வயதுப் பெண்களுக்கான 4X100 அஞ்சலோட்டத்தில் பருத்தித்துறை பெண்கள் உயர்தரப்பாடசாலை முதலாமிடத்தையும், பாவற்குளம் ம.வி. இரண்டாமிடத்தையும், வசாவிளான் ம.வி. மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப் பெண்களுக்கான 4X100 அஞ்சலோட்டத்தில் பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாமிடத்தையும், கல்மடு ம.வி. இரண்டாமிடத்தையும், மீசாலை வீரசிங்கம் ம.வி. மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

15 வயது ஆண்களுக்கான 4X100 அஞ்சலோட்டத்தில் மன்னார் அரிப்பு றோ.க.த.பா. முதலாமிடத்தையும், வவுனியா பரக்குளம் ம.வி. இரண்டாமிடத்தையும், வசாவிளான் ம.ம.வி. மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

19 வயது ஆண்களுக்கான 4X100 அஞ்சலோட்டத்தில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை முதலாமிடத்தையும், மன்னார் அரிப்பு றோ.க.த.க. பா. இரண்டாமிடத்தையும், மன்னார் நானாட்டான் ம.வி. மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

15 வயது ஆண்களுக்கான 4X400 அஞ்சலோட்டத்தில் மன்னார் அரிப்பு றோ.க.த.பா. முதலாமிடத்தையும், வேலணை மத்திய கல்லூரி இரண்டாமிடத்தையும், மன்னார் நானாட்டான் ம.வி. மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

19 வயது ஆண்களுக்கான 4X400 மன்னார் நானாட்டன் ம.வி. முதலாமிடத்தையும்,. கல்மடு ம.வி. இரண்டாமிடத்தையும், மன்னார் அரிப்பு றோ.க.த.பா. மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

ஒட்டுமொத்தப் போட்டிகளில் அடிப்படையில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 54 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், வவுனியா கல்மடு ம.வி. 34 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், மன்னார் ஜோசப் கல்லூரி 10 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்தன.

ஆண்கள் பிரிவில் மன்னார் நானாட்டான் ம.வி. 35 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், மன்னார் அரிப்பு றோ.க.த.க பாடசாலை 32 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், வவுனியா கல்மடு ம.வி. 14 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டி நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன், வடமாகாண கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர் இ. ராதாகிருஷ்ணன், வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன், வடமாகாண நவோதயாப் பாடசாலைகளுக்கான பொறுப்பாசிரியர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (12)

## பற்றிக்ஸ் தகுதி

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட மைலோ வெற்றிக் கிண்ணக் கால்பந்துப் போட்டிக்கு சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் தகுதி பெற்றுள்ளது.

ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியே சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியின் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரு கல்லூரிகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலேயே இப்போட்டி இடம்பெற்றது.

இதேவேளை, மைலோ வெற்றிக் கிண்ண தேசிய மட்ட கால்பந்துப் போட்டிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச அதிபர் வெற்றிக் கிண்ண வலைப்பந்தாட்டம் இறுதிப்போட்டியில் சண்டிலிப்பாய், யாழ். செயலகம்




(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண வலைப் பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செலயக அணியும், யாழ்ப்பாணச் செயலக அணியும் தகுதி பெற்றுள்ளது.

யாழ்ப்பாண செயலக நலன்புரிச் சங்கத்தினால் முதன் முறையாக யாழ்ப்பாணப் பிரதேச செயலகங் களுக்கிடையில் நடத்தப்படும் யாழ். மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டி நேற்று வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

முதலாவதாக நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின.

இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 10-6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மற்றுமொரு போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியும், கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின. இதில் கோப்பாய் பிரதேச செயலக அணி 17-4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாண செயலக அணியும், கோப்பாய் அணியும் மோதின. இதில் யாழ்ப்பாண செயலக அணி 21-14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. இறுதிப் போட்டி கள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.(11, 93)

## வீரர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் கலந்துகொண்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு நாளை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழக உடற்கல்வி அலகினால் யாழ்ப்பாண பல்கலைக்கழக மைதானத்தில் விளையாட்டுத் துறையின் மாணவ சங்கத் தலைவர் கோபிநாத் சிவராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.

## மாவட்ட மட்ட கூடைப்பந்து ஜொனியன்ஸ் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி ஒன்றில் ஜொனியன்ஸ் 'பி' அணி அபார வெற்றிபெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழகம் 301 ஏ அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்தும் மாபெரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் கோப்பாய் ஐக்கியம் 'ஏ' அணியும், ஜொனியன்ஸ் அணியும் மோதின.

சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய ஜொனியன்ஸ் 'பி' அணி 62-44 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடரில், நான்கு பிரிவுகளிலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் அடுத்த சுற்றுப் போட்டிக்குத் தெரிவாகும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மின்னொளியில் இப்போட்டி நடத்தப்பட்டு வருவதால் அதிகளவான கூடைப்பந்தாட்ட ரசிகர்கள் போட்டியைக் கண்டுகளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)



வடமாகாண கராத்தே வீர, வீராங்கனைகளுக்கான கராத்தேப் போட்டியின் தனிக்காட்டா மற்றும் குழுக் காட்டா, சண்டைப் போட்டிகள் நேற்று ஓ.எல்.ஆர். வித்தியாலயத்தில் நடைபெற்றது. இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்படும் இக்கராத்தேப் போட்டியில் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்குகொண்டன. சண்டைப் போட்டிகள் வயது, நிறை அடிப்படையில் இடம்பெற்றது. சண்டைப் போட்டியில் ஈடுபடும் வீரர்களைக் காணலாம். (21)

# தொடர் பயிற்சியும், விடாமுயற்சியும் இலக்கினை அடைவதற்கு உதவும்

## சாதனை நாயகி தனுஜா கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் நான் ஆரம்பத்தில் பங்குபற்றியபோது பல சமூகப் பிரச்சினைகளை எதிர்கொண்டேன். இருப்பினும் எனது விடாப்பிடியான முயற்சி, தொடர் பயிற்சி, எனது பெற்றோரின் சிறந்த ஊக்குவிப்பு மற்றும் பயிற்றுநர், பாடசாலை சமூகத்தின் சிறந்த வழிகாட்டல் ஆகியவற்றின் உதவியுடன் இன்று சாதனை வீராங்கனையாக தேசிய ரீதியில் அறியப்பட்டிருக்கின்றேன். எனவே, விளையாட்டில் ஆர்வம்கொள்ளும் இளம் வீர, வீராங்கனைகள் எங்களால் முடியும் என எண்ணி, முயற்சியும், தொடர் பயிற்சியும் மேற்கொண்டால் எங்களால் இலக்கை அடைய முடியும்.



இவ்வாறு அண்மையில் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட 21 வயதுப் பிரிவுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாதனையுடன் தங்கம் வென்ற எஸ். தனுஜா தெரிவித்தார்.

தேசிய மட்டத்தில் சாதனை நிலைநாட்டியமை குறித்து எமது செய்தியாளர் கருத்துத் கேட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது இந்த வெற்றிப்பாதைக்கு அடிப்படையாக அமைந்தவர்களில் முதன்மையானவர்கள் எனது பெற்றோரே. நான் முதலில் கோலூன்றிப் பாய்தலில் தங்கப் பதக்கம் வென்றபோது அதற்கான ஊக்குவிப்பை எனது பெற்றோர்கள் தான் வழங்கி வந்தார்கள். நான் முதலில் 2008ஆம் ஆண்டு தங்கப் பதக்கம் பெற்றுக் கொண்டேன். எனது அந்த தங்கப் பதக்கமானது பாடசாலைக்கும், பாடசாலைச் சமூகத்திற்கும் பெரும் வெற்றியாக அமைந்தது. இந்த விளையாட்டில் நான் பங்குபற்றும் பொழுது பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. பெண் என்ற அடிப்படையில் சமூக ரீதியாகவும், குடும்ப ரீதியாகவும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டேன்.

எனது அயராத உழைப்பும் எனது பயிற்றுநர் எஸ். சுபாஸ்கரன் ஆசிரியர் அவர்களின் பங்களிப்பும் இதற்குக் காரணமாக அடைந்தது. இதைவிட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர் ஆகியோரின் பங்களிப்பும் இந்த வெற்றிக்குக் காரணம்.

2009ஆம் ஆண்டு 19 வயது பெண்கள் பிரிவில் 2. மீற்றர் சாதனையாக இருந்தது. நான் 2. 81 மீற்றர் பாய்ந்து அந்தச் சாதனையை முறியடித்தேன். பின்னர் 2010ஆம் ஆண்டு என்னுடைய சாதனையை என்னால் முறியடிக்க முடியாமல் போய்விட்டது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றது. அக்காலப் பகுதிகளில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் தீவிரமாகப் பயிற்சிகளை மேற்கொண்டேன். இதனால் எனது உடல் நிலை இந்த நேரத்திற்கு முழுமையாக ஒத்துழைப்புத் தரவில்லை.

நடப்பு வருடம் இந்த சாதனையை எனது பாடசாலை மாணவி பவித்திரா முறியடித்துள் ளார். 2011ஆம் ஆண்டில் 21 வயதின் கீழ் பெண்களுக்கான போட்டியில் நான் பங்குபற்றினேன். 21 வயதுப் பிரிவின் சாதனையாக 2.90 உயரம் காணப்பட்டது. இந்தச் சாதனையை முறியடிக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் ஆழமாக இருந்தது.

இந்த வருடம் க.பொத. உயர் தரப் பரீட்சையில் தோற்றவுள்ள எனக்கு அதிக சவால்கள் இருந்தது. ஒன்று பரீட்சைக்கு படிப்பது மற்றொன்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றி சாதனையை ஏற்படுத்துவது.

கொழும்பில் விளையாட்டுப் போட்டிக்கு ஒரு சில தினங்கள் முன்னதாகவே சென்றுவிட்டோம். அங்கு பயிற்சியில் ஈடுபடும் பொழுது என்னுள்ளே ஒரு நம்பிக்கை வந்துவிட்டது. இந்த வருடம் ஒரு புதிய சாதனை படைப்பேன் என்ற நம்பிக்கை அதிகமாகத் தான் இருந்தது. இரண்டாம் நாள் காலை 10.20 மணிக்கு உயரம் பாய்தல் நிகழ்வு இருந்தது. அந்தப் போட்டிக்கான பயிற்சியில நான் ஈடுபடுவது குறைவு. அவ்வாறிருந்தும் அந்தப் போட்டியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டேன்.

அந்த நிகழ்வு முடிந்ததும் 1.20 மணிக்கு கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் பங்குபற்றினேன். இந்த ஆண்டு எமது பாடசாலை மாணவர்களால் பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டது. இதுவும் எனக்கு ஊற்சகத்தை ஏற்படுத்தியிருந்தது. 3.10 மீற்றர் உயரம் பாய்ந்து எனது சாதனையை நிலைநாட்டினேன். பாடசாலை ரீதியான சாதனை 3.20 மீற்றர் ஆகக் காணப்பட்டது. ஆசிரியர் எஸ். சுபாஸ்கரனின் வேண்டுகோளிற்கு இணங்க 3.21 உயரத்தினை வைத்து முயற்சித்தேன். இந்த முயற்சி பலன் அளிக்கவில்லை. இந்த சாதனையை முறியடித்திருப்பின் நான் ஆசிய விளையாட்டுக்களில் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். இனி வரும் காலங்களில் இந்தச் சாதனையை முறியடித்து ஆசிய விளையாட்டுகளிலும் பங்குபற்ற முயற்சிப்பேன்.

கடுமையான பயிற்சியும், அயராத பங்களிப்புமே வெற்றிக்கு அடிப்படையான காரணமாக அமைந்தன. எமது பாடசாலை விளையாட்டில் மட்டும் தான் சாதனை படைக்கின்றது என்று நினைக்கலாம். ஆனால், விளையாட்டுடன் சேர்ந்து எமது பாடசாலை கல்வியிலும் பல சாதனைகளைப் புரிந்து வருகின்றது. சர்வதேச ரீதியில் எமது பாடசாலையின் பெயர் ஓங்கி வளர்ந்துள்ளது.

எமது பாடசாலையில் நாங்கள் கோலூன்றுவதற்காகப் பயன்படுத்தும் போல் பல வீரரகள் பயன்படுத்துகின்றோம். உண்மையில் ஒருவர் பயன்படுததும் போல் இன்னொருவர் பயன்படுத்துவதில்லை. இந்த வசதி எமது பாடசாலையில் இல்லாத இடத்திலேயே அனைவரும் பயன்படுத்த வேண்டியிருக்கின்றது.

இவ்வாறான நிலையிலேயே நாங்கள் இதைப் பயன்படு த்தி சாதனையும் புரிந்துள்ளோம் என்வும் அவர் மேலும் தெரிவித்தார். (93)

## ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் அரையிறுதியில் ஸ்டோசர்

(ஒசாகா)

ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் விளையாட அவுஸ்ரேலிய வீராங்கனை சமந்தா ஸ்டோசர் தகுதி பெற்றார்.

காலிறுதியில் சேனல்ஷீப்பர்சுடன் (தென்னாபிரிக்கா) நேற்று முன்தினம் மோதிய சமந்தா 6-2, 6-3 என்ற நேர் செட்களில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் ஜப்பானின் அயுமி மோரிடாவுடன் மோதிய மரியோன் பர்டோலி (பிரான்ஸ்) 6-2, 6-1 என்ற செட் கணக்கில் எளிதாக வென்றார்.

## ஷாங்காய் ரென்னிஸ் இறுதிப்போட்டியில் பெர்ரர்

(ஷாங்காய்)

ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் விளையாட ஸ்பெயின் வீரர் டேவிட் பெர்ரர் தகுதி பெற்றார்.

ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் ஸ்பெயின் வீரர்கள் டேவிட் பெர்ரர், பெலிசியானோ லோபஸ் மோதினர். இறுதியில் பெர்ரர் 6-7(5-7), 6-3, 6-3 என்ற கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதேவேளை, இரட்டையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியது.

இதில் மேக்ஸ் மிரினி (பெலாரஸ்) டேனியல் நெஸ்டர் (கனடா) ஜோடியுடன் நேற்று முன்தினம் மோதிய பயஸ் ஜோடி 1-6, 4-6 என்ற நேர் செட்களில் தோற்றது. இறுதிப் போட்டியில் மைக்கேல் லோத்ரா, நேனட் ஜிமான்ஜிக் ஜோடியுடன் மிர்னி, நெஸ்டர் ஜோடி மோதுகிறது.

## வெற்றிப் பாதைக்கு திரும்புவோம்

(ஹைதராபாத்)

அடுத்து வரும் போட்டிகளில் எழுச்சி பெற்று வெற்றிப் பாதைக்குத் திரும்புவோம் என இங்கிலாந்து அணிக் கப்டன் குக் தெரிவித்துள்ளார்.



இந்தியாவுக்கு எதிரான முதல் போட்டியில் துடுப்பாட்டம், களத்தடுப்பு, பந்து வீச்சு என மூன்றிலும் நாங்கள் சிறப்பாகச் செயற்படவில்லை. வீரர்கள் வழக்கத்திற்கு மாறாக களத்தடுப்பில் சொதப்பியதால். இந்திய அணி 300 ஓட்டங்களை எடுத்தது. மீண்டும் தொடராது, விரைவில் எழுச்சி பெற்று வெற்றிப் பாதைக்கு திரும்ப முடியும். இந்த ஒரு தோல்வியால் தன்னம்பிக்கையை நாங்கள் இழக்கவில்லை.

நாணயச் சுழற்சியில் வெல்வது முக்கியமான ஒன்று. அதனை இழந்துவிட்டோம். முதல் போட்டியிலிருந்து சில பாடங்களைக் கற்றுக் கொண்டோம். சூழலுக்கு எதிராக எப்படி செயற்பட வேண்டும் என்று தெரியாமல் வீரர்கள் திணறினர். இதுவே தோல்விக்கு வழிவகுத்தது. அடுத்த போட்டிக்காக கடின பயிற்சி மேற்கொண்டு வருகிறோம். சுழலுக்கு எதிராக எப்படி செயல்பட வேண்டும் என்பதை தெரிந்து கொண்டு சாதிப்போம் எனவும் தெரிவித்தார்.

## ஐந்தாவது ஐ.பி.எல். தொடர் மே.தீவு வீரர்களுக்கு சிக்கல்

(கிங்ஸ்டன்)

ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரின் போது, மேற்கிந்தியத்தீவுகள் அணி சர்வதேசத் தொடரில் பங்கேற்கவுள்ளதால், கெய்ல், போலார்ட், பிராவோ உள்ளிட்ட வீரர்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஐந்தாவது ஐ.பி.எல். தொடர் ஆண்டு ஏப்ரல் 4 முதல் மே 27 வரை நடக்கவுள்ளது. ஐ.பி.எல்., தொடர் நடைபெறும்வேளை, 2012 மார்ச் 14 முதல் ஏப்ரல் 23 வரை, 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க. அவுஸ்ரேலிய அணி மேற்கிந்தியத்தீவுகள் செல்கிறது. இத்தொடருக்குப் பின் 3 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் ஒரு ருவென்ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க, மேற்கிந்தியத்தீவுகள் அணி, (2012 மே 1 முதல் ஜூன் 20 வரை) இங்கிலாந்து செல்கிறது. இந்த ஆண்டு பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில் மட்டும் மேற்கிந்தியத்தீவுகள் அணி பங்கேற்றதால், கெய்ல் (பெங்களூர்), போலார்ட் (மும்பை), டுவைன் பிராவோ (சென்னை) ஆகியோருக்கு கிரிக்கெட் சபை (டபிள்யு.ஐ.சி.பி.,), அனுமதி வழங்கி இருந்தது. வரும் ஆண்டு அவுஸ்ரேலியா, இங்கிலாந்து போன்ற அணிகளுக்கு எதிரான தொடரில் பங்கேற்க வேண்டி உள்ளதால், இந்த அனுமதி கிடைக்குமா என்று தெரியவில்லை. கிடைக்காத பட்சத்தில், பணம் அதிகம் கொழிக்கும் ஐ.பி.எல்., தொடரை தேர்வு செய்வதா இல்லையா? தேசத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதா என்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## நியூசிலாந்து இலகு வெற்றி

(ஹராரே)

சிம்பாப்வேக்கு எதிரான முதல் ருவென்ரி-20 போட்டியில், நியூசிலாந்து அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட ருவென்ரி 20 தொடரின் முதல் போட்டி ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் ஆடிய சிம்பாப்வே அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டெய்லர் 50 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு ஆடிய நியூசிலாந்து அணி 13.3 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மெக்கலம் ஆறு சிஸ்கர், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 81 ஓட்டங்களைப் பெற்றார்.

## தொடரை வென்றது மே.தீவுகள் அணி


(மிர்பூர்)

பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி கைப்பற்றிக்கொண்டது.

இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது போட்டி நேற்று முன்தினம் மிர்பூரில் இடம்பெற்றது. இதில் முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி, 48.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நாசீர் ஹொசைன் 50, முஷ்பிகுர் 69 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய மே.தீவுகள் அணி 42.4 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சாமுவேல்ஸ் 88, சிம்மென்ஸ் 80 ஓட்டங்களைப் பெற்றனர். இவ்வெற்றியின் மூலம் மே.தீவுகள் அணி ஒரு நாள் தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

# ஆயுதக்கண்காட்சி நிலையம் அமைக்க கிளிநொச்சியில் முதல்கட்டப்பணிகள்



(கொழும்பு)

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்திற்கும் கனகாம்பிகைக் குளத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள சுமார் 100ஏக்கர் நிலப பரப்பு இராணுவ ஆயுதங்களைக் காட்சிப்படுத்துவதற்கான நிலையமொன்றை அமைப்பதற்கென முதற்கட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரையில் பயன்படுத்தப்பட்ட போர் ஆயுதங்கள் பல காட்சிப்படுத்தப்படவுள்ளது. இதன் முதற்கட்டமாக பிடிக்கப்பட்ட நிலத்தினுள் இரண்டு யுத்தத்தாங்கிகளும், 3 ஆட்லறிப் பீரங்கிகளும் கொண்டு வந்து விடப்பட்டுள்ளன.

எனினும் இந்தப் பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றும், சாந்தபுரம் உள்ளிட்ட இரணைமடுக்குளத்தை அண்டியுள்ள பகுதி மக்களால் குடிநீர்த் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த கிணறொன்றும் அதனுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் பிடிக்கப்பட்ட பகுதிக்குள் வாழ்ந்த சில மக்களுக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டுள்ள நிலத்திற்க்கு வேலிகள் போடப்பட்டு இந்தப்பகுதி இராணுவத்தினருக்கு என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# ஹோட்டல் ஊழியர் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு சுற்றுலாவை மேற்கொண்டிருந்த ஜேர்மனியைச் சேர்ந்த சிறுமியொருவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். பெருந்தோட்ட பகுதி ஹோட்டல் ஒன்றில் குறித்த சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஹோட்டல் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# தாயகம் திரும்பினார் வியட்நாம் ஜனாதிபதி

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்த வியட்நாமின் ஜனாதிபதி ட்ருவோங் ரான் சாங் நேற்றுமுன்தினம் பிற்பகல் தமது தாயகம் திரும்பியுள்ளார். வியட்நாமின் ஜனாதிபதி இங்கு தங்கியிருந்த காலப்பகுதியினுள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட பல உயர் மட்ட அரச தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது உரிய தருணத்தில் தேவைப்படும் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்க வியட்நாம் தயாராகவுள்ளதாக ட்ருவோங் ரான் சாங் உறுதியளித்துள்ளார்.

# 2012 - வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு செவ்வாயன்று நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

**2012ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகள் குறித்த அறிக்கையை எதிர்வரும் செவ்வாயன்று அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ ஆகியோரின் நேரடிப் பொறுப்பில் உள்ள அமைச்சுக்களுக்கு மட்டுமே, 600 பில்லியன் (60 ஆயிரம் கோடி) ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் பொறுப்பில் உள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச் சுக்கு சுமார் 230 பில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

2011ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 215 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

பசில் ராஜபக்ஷவின் பொறுப்பில் உள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு அடுத்த ஆண்டு 104 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கப்படவுள்ளது. இந்த அமைச்சுக்கு 2011இல் 75 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதியின் பொறுப்பில் உள்ள மற்றொரு அமைச்சான நிதித் திட்டமிடல் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடும் 72.5 பல்லியன் ரூபாவில் இருந்து 124 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன் 2011இல் 130.6 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கும் இம்முறை 144 பில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

அதேவேளை, கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு 30.7 பில்லியன் ரூபாவில் இருந்து 33 பில்லியன் ரூபாவாகவும், சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு 62 பில்லியன் ரூபாவில் இருந்து 73 பில்லியன் ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

2011இல் 2.4 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட மீள்குடியேற்ற அமைச்சுக்கு 481 மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்படவுள்ளது.

# பிரதான வைத்தியசாலைகளில் விளையாட்டு கலாசாரப்பிரிவு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து பிரதான வைத்தியசாலைகளிலும் விளையாட்டு மற்றும் கலாசாரப் பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கு சுகாதார அமைச்சு உதுதேசித்துள்ளது.


தொற்று நோய் அல்லாத நோய்களால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை கவனத்திற்கொண்டு சுகாதார அமைச்சு இதற்கான திட்டத்தை முன் வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உடற்பயிற்சிகள் மற்றும் கலாசாரச் செயற்பாடுகளில் மக்கள் ஈடுபட்டுள்ளமையால் தொற்று நோய் அல்லாத நோய்களால் பீடிக்கப்படுவோரின் எண்ணிககை அதிகரிப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் மன அழுத்தம் ஆகிய நோய்களை கட்டுப்படுத்துவதற்கு கலாசாரச் செயற்பாடுகள் உதவும் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளர்கள் போன்றே பல்வேறு தேவைகளுக்காக வைத்தியசாலைக்கு வருகின்றவர்களும் பயன்பெறுகின்ற வகையில் உத்தேச விளையாட்டு மற்றும் கலாசாரப் பிரிவுகளை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என சுகாதார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# ஜே.வி.பிக்கு துரோகம் செய்வது மக்களுக்கான துரோகமாகும்



(கொழும்பு)

ஜே.வி.பி.க்கு துரோகம் செய்வதானது, அது மக்களுக்கு செய்யும் துரோகமாகும் என்று கட்சியின் பிரதான செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார். சர்வதேச புரட்சித் தலைவர் ஏனஸ்ரோ சே குவேராவின் நினைவு தினம் நேற்று முன்தினம் கொழும்பு ஜயவர்தன நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சோசலிச இளைஞர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், சங்கத்தின் தலைவரும், ஜே.வி.பி இன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமால் ரத்நாயக்க உட்பட பலர் உரையாற்றினர்.

இதேவேளை, ஜே.வி.பி. இன் புரட்சிகர பிரிவினர் சே குவேராவை நினைவு கூரும் வகையிலான நிகழ்வொன்று கடந்த 8 ஆம் திகதி பத்தரமுல்லையில் உள்ள ஜன கலா மத்திய நிலையத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பிராடோ வாகனம் கைப்பற்றப்பட்டது சந்தேகத்தில் சாரதியும் கைது

(கொழும்பு)

பிறமுகர் இல்லாத பிராடோ வாகனத்தை வி.ஐ.பி. எனக் குறிப்பிடப்பட்ட அறிவித்தலை காட்சிப்படுத்தி செலுத்திய சாரதியை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கடுவெல - அங்கொட வீதியில் கைது செய்துள்ளனர்.

கல்வான சமுத்திராதேவிக் கல்லூரி அருகில் ஏற்படுத்தப்பட்டிருந்த திடீர் வீதித் தடையில் வைத்து குறித்த சாரதி நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதுடன் பிராடோ வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். வாகனத்தின் பதிவுச் சான்றிதழ், காப்புறுதிச் சான்றிதழ், வருமான வரிப் பத்திரம் ஆகியன சாரதி வசம் இருக்காததால் அந்த வாகனத்தை கைப்பற்ற நேரிட்டதாக பொலிஸ் அதிரடிப் படை தெரிவித்துள்ளது.

எவ்வித சட்டபூர்வ ஆவணமோ அல்லது அனுமதியோ இன்றி சிவப்பு நிற இலக்கத்தகடுடன் குறித்த வாகனம் செலுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. சுங்கத் திணைக்களத்திற்கு முறையாக வரியைச் செலுத்தாமல் சட்டவிரோதமாக இந்த வாகனம் இறக்குமதி செய்யபபட்டிருக்கலாம் என பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் சந்தேகம் வெளியட்டுள்ளனர்.

# நுகர்வோர் அதிகார சபைக்கு சிமெந்து தர அறிக்கை கிடைக்கவில்லை

(கொழும்பு)

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற சிமெந்தின் தரம் தொடர்பில் பரிசோதிப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சிமெந்தின் மாதிரிகள் தொடர்பான பரிசோதனை அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை என நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சந்தையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சிமெந்து மாதிரிககள் பரிசோதனைக்காக வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அதிகார சபையின் தலைவர் றூமி மர்சூக் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த சிமெந்தின் மாதிரிகள் அனுப்பிவைக்கப்பட்ட நாடு தொடர்பிலான தகவல்கள் வெளியிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் சிமெந்தின் தரம் குறித்து ஆராய்வதற்காக அதன் மாதிரிகளை பரிசோதிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக நுகர வோர் சேவைகள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. இதற்கமைவான பரிசோதனைகள் அறிக்கைகள் விரைவில் தமக்குக் கிடைக்கும் என அதிகார சபையின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# திருமலை செயலகக் கட்டடத்தை ஜனாதிபதி திறந்து வைப்பார்


(கொழும்பு)

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டச் செயலகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை திறந்து வைக்கவிருப்பதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். புதிய மாவட்ட செயலகக் கட்டடம் திருகோணமலை - கண்டி வீதியில் திருகோணமலை நகரிலிருந்து நான்கு மைல் தொலைவில் 4ஆம் கட்டை என்னும் இடத்தில் அமைநதுள்ளது.

தற்போதைய மாவட்டச் செயலகம் பிரட்ரிக் கோட்டைக்குள் பிரித்தானியர் காலத்து கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.


27.




அரைவட்டம் ABC இன் சுற்றளவைக் காண்க.

28. x, 2x -3, 4x என்பன கூட்டல் விருத்தியில் அமைந்தால் X ஐக் காண்க.

29.




1) நேர்கோடு AB இன் படித்திறனைக் காண்க.

2) AB இன் சமன்பாடு யாது?

30. தரப்பட்ட நேர்கோடு xy இலிருந்து 2cm தூரத்திலும் x இலிருந்து 3cm தூரத்திலும் உள்ள இரண்டு புள்ளிகளை ஒழுங்குகள் பற்றிய அறிவைப் பயன்படுத்தி வரைந்து காண்க.




31. குறித்த பரீட்சை ஒன்றில் 15 மாணவர் பெற்ற புள்ளிகள் வருமாறு,

35, 25, 28, 45, 58, 62, 70, 33, 15, 30, 7, 40, 73, 38, 26 இப்புள்ளிகளின்

1) இடையம் :

2) முதற் காலணை :

3) மூன்றாம் காலணை :

4) காலணை இடை வீச்சு என்பவற்றைக் காண்க.

32. $4^{x-1} = 16$ என்னும் சுட்டி சமன்பாட்டில் X இன் பெறுமதியைக் காண்க.



# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 1 மணி

பிரபல ஆசிரியர்

# கல்வி முரசு


## கணிதம் -I பகுதி A

**பாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

01. ஒரு புத்தகத்தின் விலை 16.50 ஆகும். 4 புத்தகங்களின் விலை யாது?

02. 1.75g ஐ mg இல் தருக.

03.




உருவில் ABC ஒரு முக்கோணி X° ஐக் கணிக்க.

04. கழிக்குக. 11.02 - 7.51


05. தீர்க்க 2 - a = -5

06. பின்வரும் தரவில் ஆகாரம் யாது?

9, 8, 12, 11, 7, 6, 11, 3, 8, 11, 5

07. சுருக்குக. $5\sqrt{2} + 3\sqrt{2} - \sqrt{2}$

08.




தரப்பட்ட வென்னுருவில் n(A∩B) யாது?

09. 1500 $cm^3$ கொள்ளளவுள்ள போத்தலில் எத்தனை லீற்றர் நீரை நிரப்ப முடியும்?

10. ஒரு தேங்காயின் விலை ரூபா m எனின், 50 தேங்காயின் விலை யாது?

11. சுருக்குக. $\frac{3}{x-2} + \frac{2}{x+2}$

12. $P = 5, q = -2$ எனின் $P^2 - 3q$ இன் பெறுமானம் யாது?

13. நான்கு பிள்ளைகளின் நிறைகளின் இடை 40kg இவர்களின் 3 பேரின் இடை 45kg ஆயின் நான்காவது சிறுவனின் நிறை யாது?


14. $x^3 - 4x = 0$ என்னும் சமன்பாட்டின் மூலகங்களைக் காண்க.

15. $x + 1/x = 7$ எனின் $x^2 + 1/x^2$ ஐக் காண்க.

16. ரூபா 500 ஆக குறிக்கப்பட்ட பொருள் ஒன்று 7 வீதக் கழிவு கொடுத்து விற்கப்பட்டது எனின், விற்ற விலை யாது?

17. சுருக்குக. $110_{\text{இரண்டு}} + 7_{\text{எட்டு}}$ விடையை அடி எட்டில் தருக.

18.




உருவில் $A\hat{E}B = 32°$ $\quad A\hat{B}C = 130°$ எனின்

1) X ஐக் காண்க.

2) Y ஐக் காண்க.

19. $S = q + at$ என்பதில் t ஐ s, q, a இல் தருக.


20. சுருக்குக. $8^{-2/3} \times 27^{1/3}$

21. காரணி காண்க. $a - ax - bx + b$

22. 54 km / h சீரான கதியில் செல்லும் புகைவண்டித் தொடர் ஒன்று ஒரு தந்திக் கம்பத்தை 10 செக்கனில் கடந்தது. புகைவண்டித் தொடரின் நீளம் யாது? (மீற்றரில்)

23. $\lg 125 + 2\lg 3 = 2\lg x + \lg 5$ மடக்கை வாய்ப்பாடு உபயோகிக்காது தீர்க்க.


24.




உருவில் AD = 8cm, DE = 6 cm, EB = 15 cm, BC = 10 cm இயல்பொத்த முக்கோண அறிவைப் பயன்படுத்தி x, y ஐக் காண்க.

25. $a + b = x$, $a - b = y$ எனின் $b = \frac{x-y}{2}$ எனக் காட்டுக.

26.




தரப்பட்ட தரவுகளுக்கு ஏற்ப $3x^2 + a^2 = 0$ எனக் காட்டுக.

# குழந்தைகளை வடிவமைக்கும் பெண்





இந்தச் சாதனைப் பெண்ணைப் பாருங்கள். இவர் கையினால் குழந்தை பொம்மைகளை தத்ரூபமாக செய்து அசத்துகிறார். இவரது பெயர் கமிலா அலென். இவருக்கு 30 வயது ஆகின்றது. இவர் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் Powell River பிரதேசத்தைச் சேர்ந்தவர்.


தனது பாட்டியிடம் இருந்தே இப்படியான உயிரோட்டமுள்ள குழந்தை பொம்மைகளைச் செய்யும் வித்தையைக் கற்றுக் கொண்டதாகக் கூறுகிறார் இந்தச் சாதனைப்பெண்.

இவர் செய்யும் குழந்தை பொம்மைகளுக்கு உலகெங்கும் பலத்த வரவேற்புக் கிடைத்துள்ளது. நீங்களும் பாருங்களேன் இவர் செய்த குழந்தை பொம்மைகளை...

# சூப்பர் மேன் ஆன கோமாளி

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆண் ஒருவர் சூப்பர்மேன் கதாபாத்திரத்தின் தீவிர ரசிகர் ஆவார். இவர் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை முறை மூலம் சூபபர்மேன் போன்ற தோற்றத்தைப் பெற்றுள்ளார். கேர்பேர்ட் எனும் 35 வயது நபரே இவ்வாறு உருமாறியுள்ளார்.

1995 ஆம் ஆண்டிலிருந்து இடையிடையே செய்யப்பட்ட சத்திர சிகிச்சை மூலம் இவர் தற்பொழுது சூப்பர்மேன் போன்ற தோற்றத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் இவர் அறையும் சூப்பர்மேன் அலங்காரத்தில் வடிவமைக்கப்படுள்ளது.




Before After

# சத்தங்கள் மூலம் தகவல் பரிமாறும் மீன்கள்

ஆசை, அடிதடி ஆகியவற்றுக்கு பிரன்ஹாஸ் மீன்கள் 3 சத்தங்களை எழுப்பி தகவல் தெரிவிப்பதாக பெல்ஜியம் ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. பெல்ஜியம் நாட்டின் லீஜ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த உயிரின ஆராய்ச்சியாளர் எரிக் பார்மெண்டீர். இவர் தனது ஆய்வகத்தில் பல வகை மீன்களை தொட்டியில் வளர்த்து அவற்றின் தகவல் பரிமாற்றம் பற்றி ஆராய்ந்தார். அவற்றில் பிரன்ஹாஸ் மீன்கள் தகவல் தொடர்புக்கு 3 விதமான சத்தங்களை பயன்படுத்துவதாக கண்டுபிடித்தார். இதுபற்றி எரிக் கூறியதாவது மற்றவர்கள் கவனத்தை கவர சண்டையிடுவதைவிட சத்தம் எழுப்புவது குறைவான சக்தியை வெளியிடும் என்பதை விலங்குகள் அறிந்துள்ளன.




இணையை கவர்வதற்கு பல வகை மீன்கள் சத்தம் எழுப்புவது உண்டு. இன விருத்திக்கு மீன்கள் சத்தம் எழுப்புவது அவசியமான அறிகுறி என இதன்மூலம் தெரிகிறது. மீன்கள் எழுப்பும் சத்தத்தை புரிந்து கொள்வதன் மூலம் அவற்றின் நடவடிக்கைகளை அறிய முடிந்தால் கடலில் மீன்களை நம்பியுள்ள மீனவர்களுக்கு அதுபற்றி நாம் தெரிவிக்க முடியும். அதற்கான சரியான நேரம் இன்னும் வரவில்லை. எனினும் ஆய்வகத்தில் பிரன்ஹாஸ் மீன்களின் தகவல் பரிமாற்றத்தை நீருக்கடியில் மைக்ரோபோன் பொருத்தி பொறுமையாக காத்திருந்து பதிவு செய்தோம். அதில் முதல் சத்தம் குரைப்பது போல இருக்கிறது. அது தனது வருகையை மற்ற மீன்களுக்கு உணர்த்துவதாக இருக்கிறது. சண்டையிடுவதற்கு பதிலாக சத்தம் மூலம் மிரட்டுவதாக உள்ளது. டிரம்ஸ் எழுப்பும் சத்தம் போல உள்ள அடுத்த 2 ஒலிகளை மீன்கள் ஒன்றையொன்று துரத்தும் போதும், கடிக்கும் போதும் எழுப்புகின்றன. பொதுவாக உணவுக்காக சண்டை நடக்கும்போது இதுபோன்ற சத்தம் எழுகிறது.

# பற்களால் தேங்காய் உரித்து சாதனை!

நாம் தேங்காய் கத்தி அல்லது அலவாங்கு எனப்படும் சாதனங்களால் உரிப்பது வழக்கம். இவ்வாறு ஒரு தேங்காயை உரிக்கவே எமக்கு பல நிமிடங்கள் எடுக்கிறது. ஆனால் பற்களால் தேங்காய் உரிக்க முடியுமா? அப்படியாயின் சில நொடிப் பொழுதுகளுக்குள்ளாகவே ஒரு முழுத்தேங்காயையும் உங்களால் பற்களை மட்டும் பயன்படுத்தி உரித்து காட்ட முடியுமா? ஆம் என நிருபித்துக்காட்டுகிறார் பிலிப்பைன் நாட்டின் ஒரு தீவுப்பகுதியில் வாழும் மனிதர். ஒரு சில நிமிடங்கள் அல்ல செகசன்களே எடுக்கிறது இவருக்கு ஒரு தேங்காய் உரிபபது. என்ன ஒரு திறமை இவர் வைத்திருப்பது பற்களா? இல்லை பளிங்கு கற்களா?



எந்தனையோ வினோதமான மனிதர்களை பார்த்திருப்பீர்கள் ஆனால் இப்படி தனது உடம்பை Tennis racket-க்குள் நுழைக்கும் மனிதனை பார்த்திருப்பீர்களா?உண்மை பாருங்கள்...



# புதிய ஐ போன்

அப்பிள் நிறுவனம் மேம்படுத்தப்பட்ட புதிய ஐ. போனை அறிமுகப் படுத்தியுள்ளது. அதில் புதிய மென்பொருளைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட புதிய பிரிவுகள் காணப்படுகின்றன. அதில் GPS முறையைப் பயன்படுத்தி உள்ளூர் விபசாரிகள் எங்கு உள்ளனர் என்று அறிந்து கொள்ளலாமாம். பாருங்கள் தொழிநுட்பத்தை எப்படியெல்லாம் பயன் படுத்துகிறார்கள் என்று...





குரல் சேவையாகத் தான் இதில் தரவுகள் பதிவாகியுள்ளன. சிறி குரல் கட்டுப்பாட்டுத் திட்டம் என்று தான் தொடங்கப்பட்டுள்ளது. பரிசோதனையில் உள்ள இந்த திட்டம் விரைவில் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கக்கட்டி கொடுக்கும் இயந்திரம்


நாமெல்லாம் தங்கக்கட்டிகளை வங்கிகளிலும், பெரிய நிறுவனங்களிலும் தான் வாங்க முடியும். இந்த நிலையை மாற்றிச் சீனாவில் தங்கக்கட்டிகளை விற்பனை செய்வதற்கு என தனி இயந்திரங்களை அமைத்துள்ளனர். குளிர்பானங்களை விநியோகிக்கும் எந்திரங்கள் போலவே பல இடங்களில் தங்கக் கட்டிகளை விற்பனை செய்யும் இயந்திரங்கள் அமைக்கப் பட்டுள்ளதாம். தங்கத்தில் முதலீடு செய்ய விரும்புகிறவர்கள் இந்த இயந்திரத்தின் மூலம் தங்கக்கட்டிகளை வாங்கி வைத்துக் கொள்ளலாம். ஆனால் குளிர்பான எந்திரங்கள் போல் இல்லாமல் இந்த தங்க இயந்திரங்களை பாதுகாப்பதற்காக ஆயுதம் ஏந்திய காவலர்களும் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளனராம்.



# பாரதீய ஜனதா கட்சி மீது மக்களுக்கு நம்பிக்கை

## அத்வானி



(புதுடில்லி)

அடுத்த லோக் சபா தேர்தலின் போது, என் உடல்நிலை எப படி இருக்கிறதோ, அதை வைத்து, பிரதமர் பதவிக்கான வேட்பாளராவதா, இல்லையா என்பதை முடிவு செய்வேன்" என, பா.ஜ., மூத்த தலைவர் அத்வானி கூறினார்.

ஊழலுக்கு எதிராக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், பா.ஜ., மூத்த தலைவர் அத்வானி, ரத யாத்திரை மேற்கொண்டு வருகிறார். நேற்றுமுன்தினம் மத்தியப்பிரதேச மாநிலத்துக்கு வந்த அத்வானி, செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஊழலுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்துவது மட்டும் அல்லாமல், மத்தியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதும், என் ரத யாத்திரையின் முக்கிய குறிக்கோள். சில மாநிலங்களில் பா.ஜ., ஆட்சி நடந்து வருகிறது. இந்த மாநிலங்களில், சிறப்பான நிர்வாகம் நடக்கிறது. வளர்ச்சித் திட்டங்களும்சிறப்பாக செயற் படுத் தப்படுகின்றன. இதன் மூலம், எங் கள் கட்சி மீது, நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. கர்நாடகாவில் சில பிரச்சினைகள் இருந்தாலும், அங்கும் சிறப்பான முறையில் ஆட்சி நடக்கிறது.

தற்போது ஊழலுக்கு எதிராக மக்களிடம் எழுந்துள்ள கோபத்தை, நாங்கள் சாதகமாக பயன படுத்துகிறோம் என, கூறுவதை ஏற்க முடியாது. ஊழலை பொறுத்தவரை, கட்சியோ, தலைவரோ முக்கியம் அல்ல. ஊழலைத் தடுக்க வேண்டும் என்பது மட்டுமே முக்கியம். அடுத்த லோக்சபா தேர்தலில், நான் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக இருப்பேனா, இல்லையா என, அடிக்கடி கேட்கப்படுகிறது. அப்போது, என் உடல் நலன் எபபடி இருக்கிறதோ, அதை வைத்து, வேட்பாளராவதா, இல்லையா என முடிவு செய்வேன்.

வெற்றி பெற்றுவிடுவோம் என, அதீத நம்பிக்கை வைத்திருந்ததால் தான், 2004 லோக்சபா தேர்தலில் தோல்வி அடைந்தோம். அடுத்த லோக்சபா தேர்தலில், இந்த விடயத்தில் கவனமாக செயற்படுவோம். ஊழலை கட்டுப்படுத்துவதில், பிரதமர் மன்மோகன் சிங் தோல்வி அடைந்து விட்டார்.

பிரதமர் நேர்மையானவராக இருந்தால் மட்டும் போதாது. மற்றவர்களையும் நேர்மையாக செயற்பட வைக்கவேண்டிய பொறுப்பு, அவருக்குள்ளது. அரசியல் கட்சிகளுக்கு, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஒருபோதும் மாற்றாக செயற்பட முடியாது என அத்வானி தெரிவித்தார்.

# மன அமைதிக்காக ஒரு வாரம் அன்னா ஹசாரே மௌனவிரதம்

(புதுடில்லி)

மன அமைதிக்காக ஒரு வாரத்துக்கு அன்னா ஹசாரே மௌனவிரதம் இருக்கப் போவதாக அவரது குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அன்னா ஹசாரேயின் ஊழலுக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த ஷ்யாம் ஆஷவா இது தொடர்பாக தெரிவிக்கையில்,


ஊழலுக்கு எதிராக கடந்த ஒகஸ்டில் டில்லியில் 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார் அன்னா ஹசாரே.

பின்னர் ஒரு சில நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இதையடுத்து பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள, பிரபலங்களுடன் தொடர்நது ஆலோசனை, கலந்துரையாடல் என மிகவும் வேலைப்பளுவில் இருந்தார். இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார்.

எனவே மன அமைதி பெறுவதற்காக இன்று முதல் தொடங்கி ஒரு வாரம் வரை மௌனவிரதம் மேற்கொள்ள அவர் முடிவு செய்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 1998 இல் காஷ்மீரில் உள்ள என் வீட்டுக்கு வந்த ஹசாரே மனித உரிமை மீறல் தொடர்பாகவும், மக்களுக்கான அரசியல் உரிமை பற்றியும் பேசினார்.

இந்நிலையில் தற்போது காஷ்மீர் இந்தியாவின் ஒரு அங்கம் என அவர் பேசியிருப்பது ஆச்சரியம் அளிக்கிறது என ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி அமைப்பின் தலைவர் யாசின் மாலிக் கூறியுள்ளார்.



குஜராத் மாநிலம், பானஸ்கந்தா மாவட்டம் குந்தவாடா கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள, ஆசியாவிலேயே பெரிய சூரிய சக்தி மின்சார உற்பத்தி பண்ணையை தொடக்கி வைத்து, பைனாகுலர் மூலம் முதல்வர் மோடி பார்வையிடுகின்றார்.

# கூடங்குள அணுமின் விவகாரம் உண்ணாவிரதிகள் 34 பேர் மயக்கம்

(சென்னை)

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிரான போராட்டத்தில் உண்ணாவிரதம் இருந்த 34 பேர் மயக்கமடைந்துள்ளனர். இதனால் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து போராட்டக் குழு ஆலோசனை நடத்தி வருகிறது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி அணுமின் நிலைய எதிர்ப்பாளர்கள் இடிந்தகரையில் கடந்த 9 ஆம் திகதி முதல் 2 ஆவது கட்டமாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆயிரக்கணக்கான பொதுமக்கள், மீனவர்கள் பங்கேற்றுள்ள இந்தப் போராட்டத்தில் 106 பேர் உண்ணாவிரதம் இருந்து வந்தனர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த 106 பேரில் 34 பேர் மயக்கமடைந்தனர். அவர்கள் கூடங்குளம் பகுதியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். அதேநேரத்தில் கன்னியா குமரி இராமேஸ்வரம் தேசிய நெடுஞ் சாலையில் உள்ள கூடங்குளம் எஸ்.எஸ்.புரம் சந்திப்பில் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்களும், பொது மக்களும் நடத்திய போராட்டம் தொடர்ந்து இடம் பெறுகின்றது.

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு வேலைக்கு சென்ற ஒப்பந்த தொழிலாளர்களை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பினர்.

நாகர்கோவிலில் தங்கியிருந்த அணுமின் நிலைய பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள் பணிக்குச் செல்லவில்லை. அதே போல் கூடங்குளம் அருகேயுள்ள செட்டிகுளம் அணுவிஜய் நகரில் தங்கியுள்ள அணுமின் நிலைய பணியாளர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள் எவரும் பணிக்குச் செல்லமுடியவில்லை. இதனால் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் அனைத்துப் பணிகளும் நிறுத்தப்பட்டன.

கூடங்குளம் வழியாக செல்லும் அனைத்து வீதிகளிலும் போராட்டக்காரர்கள் கற்களை குவித்தும், மரங்களை வெட்டி போட்டும், தடுப்புகள் அமைத்தும் உள்ளதால் அவ்வழியாக போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. அணுமின்நிலைய எதிர்ப்பாளர்கள் இரவு- பகலாக தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தி.மு.க.வின் அண்ணா அறிவாலயம் கருணாநிதியின் சொத்தாகிவிட்டது

## முதல்வர் ஜெயலலிதா



(புதுடில்லி)

அண்ணா அறிவாலயம் தொடர்பாக மாற்றி மாற்றி பேசி வருகிறார் கருணாநிதி. அண்ணா அறிவாலயத்தை இன்று கருணாநிதியின் குடும்பச் சொத்தாக்கி விட்டனர் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்த இறுதிக் கட்டப் பிரசாரத்தின்போது மாநகராட்சித் தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க வேட்பாளர்களை ஆதரித்து பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அப்போது அவர் தொடர்ந்து பேசுகையில், அண்ணா அறிவாலயம் அச்சுறுத்தி வாங்கப்பட்டது குறித்து திருச்சியில் நான் எடுத்துக்கூறினேன். இதற்கு அண்ணா அறிவாலயம் 1972 ஆம் ஆண்டு வாங்கப்பட்டது. அந்த மனை ஏறத்தாழ 25 கிரவுண்டு இடம் என்று கூறினார்.

அண்ணா அறிவாலயம் அமைந்துள்ள இடம் 25 கிரவுண்டு அல்ல, 90 கிரவுண்டு என்று தூத்துக்குடியில் நான் எடுத்துக் கூறினேன். இதற்குப் பதில் அளிதத கருணாநிதி, ஒரு காணி என்பதற்கு ஏறத்தாழ 25 கிரவுண்டு என்று சொன்னேனே தவிர, முழு இடமுமே 25 கிரவுண்டு என்ற பொருளில் பேசவில்லை என்று கூறி இருக்கிறார். இதிலிருந்து, மாறி, மாறி பேசுவதில் வல்லவர் என்பதை கருணாநிதி நிரூபித்து இருக்கிறார். இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

# சிறைக் கைதிகளுக்கு தேசிய அடையாள அட்டை

திஹார் சிறைக் கைதிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்க மத்திய அரசு முடிவுசெய்துள்ளது.

மத்திய அரசின், ஆதர் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் படி திஹார் சிறையில் உள்ள கைதிகளுக்கு விரைவில் தேசிய அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

இது குறித்து திஹார் சிறைத் துறை டி.ஐ.ஜி. எஸ்.என் ஷர்மா கூறியதாவது, நாடு முழுவதும் வழங்கப்பட்டு வரும் தேசிய அடையாள அட்டை சிறை கைதிகளுக்கும் விரைவில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனால் விருப்பமுள்ள கைதிகள், தங்களது நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி குறித்த ஆவணங்களை சமர்பித்து திஹார் சிறை அருகே ரஜோரி பூங்கா வில் உள்ள டிவிசனல் மாஜிஸ் திரேட் அலுவலகத்தில் புகைப் படம் எடுத்துக்கொள்ளலாம்.

பயோமெட்ரிக் மூலம் அவர்களது புகைப்படம், கைரேகை பதியப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# சிறையில் அடைக்கப்பட்ட எடியூரப்பா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்

அரசு நிலத்தை நிலமறு அறிவிப்பு மூலம் சிலருக்கு தாரை வார்த்த வழக்கில் கர்நாடக முன்னாள் முதல்வர் எடியூரப்பா பெங்களூர் சிறையில் அடைக்கப் பட்டிருந்தார்.

அதிகாலையில் அவருக்கு வாந்தியும், நெஞ்சுவலியும் வந்ததால் அவசரமாக ஜெயதேவா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவர் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தாலும் உடல் நிலை தற்போது சகஜமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

எடியூரப்பா தனது ஆட்சிக் காலத்தில் அரசு நிலத்தை தனது மகன்கள் நடத்தும் கம்பெனிக்கு குறைந்த விலைக்கு தாரை வார்த்ததாக லோக் அயுக்தா சிறப்பு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

எடியூரப்பா தாக்கல் செய்த முன் பிணை மனுவை கோர்ட் நிராகரித்தது. இதனையடுத்து வாரண்ட் உத்தரவும் பிறப்பிக்கப் பட்டதால் அவரை கைது செய்ய பொலிஸார் அவரது வீட்டிற்குச் சென்றனர்.

ஆனால் முன்கூட்டியே புறப்பட்டு நீதிமன்றம் வந்து சரண் அடைந்தார். பின்னர் அவரை வரும் 22 ஆம் திகதி வரை சிறைக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். சிறையில் இருந்த போது 2 மணியளவில் வாந்தி எடுத்தார். தொடர்ந்து தனக்கு நெஞ்சுவலி இருப்பதாகவும் கூறினார். இதனையடுத்து ஜெயில் அதிகாரிகள் அவரை மருத்துவமனையில் சேர்த்தனர்.

# தெரு ஆக்கிரமிப்புப் போராட்டம் உலக நாடுகளிலும் பரவியது

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்து வரும் "வால் தெரு ஆக்கிரமிப்பு இயக்க" போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், உலகப் பொருளாதாரம் சீர்கேடு அடைவதற்குக் காரணமான வங்கிகள், நிதி நிறுவனங்கள், அரசியல்வாதிகளைக் கண்டித்தும், போராட்டங்கள் உலகளவில் தொடங்கியுள்ளன.

"வால் தெரு ஆக்கரமிப்பு இயக்கம்" கடந்த செப்ரெம்பர் 17ஆம் திகதி நியூயோர்க்கில் ஆரம்பமாகிய போராட்டம், தற்போது அமெரிக்காவின் நூற்றுக்கும் மேற்பட்ட நகரங்களில் நடந்து வருகிறது.

இந்நிலையில், நியூயோர்க்கில், ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கியுள்ள, தனியாருக்குச் சொந்தமான "ஜுகோட்டி பூங்காவில்" இருந்து ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்றும் நோக்கில், அந்தப் பூங்காவைத் தூய்மைப் படுத்தப் போவதாக, பூங்கா உரிமையாளரான "ப்ருக்பீல்டு பிராபர்ட்டீஸ்" நிறுவனம் அறிவித்தது.




தூய்மைப்படுத்திய பின் ஆர்ப்பாட்டக்காரர்கள் பூங்காவில் மீண்டும் தங்கலாம் எனவும் கூறியிருந்தது. ஆனால், இதன் மூலம் தங்கள் ஆர்ப்பாட்டத்தை நசுக்க நியூயோர்க் பொலிஸார் முயல்வதாகக் கருதிய ஆர்ப்பாட்டக்காரர் கள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர், பூங்காவில் நேற்று முன்தினம் திரண்டு, அங்கிருந்து செல்ல முடியாது என தெரிவித்தனர்.

இதன் பின், கடைசி நேரத்தில், தனியார் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், பூங்காவை தூய்மைப்படுத்தும் நடவடிக்கை தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், "வால் ஸ்டிரீட் ஆக்கிரமிப்புப் போராட்டம்" உலகளவில் பரவி வருகிறது. தென்னாபிரிக்கா, தென்னமெரிக்கா, கனடா, ஐரோப்பா, ஆசியா, தெற்காசியா, ரஷ்யா என உலகம் முழுவதும் போராட்டங்கள் நேற்றுமுன்தினம் முதல் தொடங்கியது. இதற்காக, இதில், உலகம் முழுவதும, இந்தியா உள்ளிட்ட 82 நாடுகளில், 951 நகரங்களில் "வால் ஸ்டிரீட் ஆக்கிரமிப்புப்" போராட்டம் நடக்கப் போவதாக அறிவிக்கபட்டுள்ளது.

# மருத்துவ பரிசோதனைக்காக கியூபா சென்றார் சாவேல்



வெனிசுவெலா ஜனாதிபதி ஹுகோ சாவேஸ் மருத்துவ பரிசோதனைகளுக்காக கியூபாவிற்கு பயணமாகியுள்ளார்.

புற்றுநோய் காரணமாக சததிர சிகிச்சை மேற்கொண்டு நான்கு மாதம் கடந்துள்ள நிலையில் மீண்டும் தனது உடல்நிலை குறித்து மருத்துவப் பரிசோதனை செய்வதற்காக கியூபா செல்வதாக சாவேஸ குறிப்பிட்டுள்ளார். 57 வயதான சாவேஸ் தான் திடகாத்திரமாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். 1999 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சியல் இருக்கும் ஹுகோ சாவேஸ் தனது இந்த நிலைமை அரசியல் பயணத்திற்கு தடையாக இருக்காது எனவும் அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேர்தலில் தான் போட்டியிடப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# இஸ்ரேலின் குடியேற்றத் திட்டத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

இஸ்ரேலின் புதிய குடியேற்றத் திட்ட நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றென ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக் காட்டியுள்ளது. கிழக்கு ஜெருசலேமில் இராண்டாயிரத்து 600 மேலதிக குடியேற்றங்களை அமைக்கும் இஸ்ரேலின் திட்டத்தினை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் கடுமையாக விமர்ச்சித்துள்ளார்.

பலஸ்தீனத்திடம் இருந்து கைப்பற்றப்பட்ட கிழக்கு ஜெருசலேம் பகுதியில் இஸ்ரேல் குடியேற்றங்களை அமைக்கும் நடவடிக்கைகள் குறித்து பான் கீ மூன் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் - பலஸ்தீன சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில இஸ்ரேலின் இந்த நடவடிக்கை ஏற்றுகொள்ள முடியாதென பான் கீ மூனின் ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் குறித்த குடியேற்றத் திட்டங்கள் நிறுத்தப்பட வேண்டுமென பலஸ்தீன் உறுதிப்பட தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## விமானத் தாக்குதலில் அல்ஹைய்தா அதிகாரி பலி

ஏமனில் இயங்கும் அல்ஹைய்தா இயக்கத்தின் ஊடக சிரேஷ்ட அதிகாரி அமெரிக்க ஆளில்லா விமானத தாக்குதலில் கொல்லபபட்டுள்ளதாக தெரிவிக்கபடுகின்றது.ஏமனின் தென் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் குறித்த அல்ஹைய்தா இயக்க உறுப்பினர் கொல்லப்பட்டுள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எகிப்தினை சேர்ந்த இப்ராஹிம் அல்பானானா உட்பட ஆறு ஆயுததாரிகள் சப்பா மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். எனினும் ஏமனின் விமானங்களே இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டதாக வேறு சில தகவல்கள் தெரிவித்துள்ளன. அமெரிக்க ஆளில்லா விமானங்கள் கடந்த மாதம் மேற்கொண்ட தாக்குதலில் அன்வர் அல் அவ்லாக்கி என்ற அல்ஹைய்தா அமைப்பின் சிரேஷ்ட தலைவர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கலகக்காரர்களுக்குத் தண்டனை இத்தாலியப் பிரதமர் அறிவிப்பு



இத்தாலியில் கலகம் ஏற்படுத்தி வரும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தண்டனை வழங்கப் போவதாக அந்நாட்டின் பிரதமர் பேர்லூஸ்கோணி உறுதியளித்துள்ளார்.

இத்தாலியின் றோம் நகரில் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நிதிக்கட்டமைப்பில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மற்றும் அந்நாட்டு அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் வறியவர்கள் தொடர்ந்தும் ஒதுககப்பட்டு வருவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் பல சொத்துக்களை சேதமாக்கியதுடன் வாகனங்களையும் தீயிட்டு கொழுத்தியுள்ளனர். இதன் காரணமாக ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் தடியடி மற்றும் நீர்த் தாரைபிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதில் சுமார் 70 பேர் வரையில் காயமடைந்துள்ளதோடு அவர்களுள் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

குமார் ரெக்ஸ் நிறுவனத்திற்கு கணக்காளர் தேவை. ஆற்றல் உள்ள இருபாலாரும் இல 127/14 யுமிலி பஜார் மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

யாழ்நகரில் உள்ள புடவை நிலையத்திற்கு அனுபவமுள்ள/ பழக விரும்பும் பெண் விற்பனையாளர், சிட்டை எழுதுநர் (பெண்) வயது 20-30 தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0777488093, 0212225578 என்ற இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.

கனடாவை தலைமையகமாக கொண்டு இலங்யைில் இயங்கும் நிறுவனத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா கிளைகளுக்கு முகாமைத்துவ பயிற்சிக்கு ஆட்கள் தேவை O/L, A/L சித்தியடைந்தவர்களும், தொழிலை எதிர்பார்த்து இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். 3-6 மாதம் இலவச பயிற்சி, பயிற்சியின் போது சம்பளம் வழங்கப்படும் ஆர்வமுள்ளவர்கள் 0777274795, 024 4907747 என்ற இலக்கத்திற்கு காலை, 10-12 மணி வரை, பிற்பகல் 2.30 - 5.00 மணிவரை தொடர்பு கொள்ளவும்.

03 பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0776277332 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யூனியன் அஷ்யூரன்ஸின் யாழ்மாவட்ட கிளையில் சிரேஷ்ட தனிப்பட்ட நிதி முகாமையாளர், தனிப்பட்ட நிதி முகாமையாளர், சிரேஷ்ட தனிப்பட்ட நிதி ஆலோசகர், தனிப்பட்ட நிதி ஆலோசகர் காப்புறுதி ஆலோசகர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் நேர்முகத் தேர்விற்கு தயாராக நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யூனியன் அஷ்யூரன்ஸ் 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வரவும் மேலதிக விபரங்களுக்கு 0774115290 இற்குத் தொடர்பு கொள்ளவும்.

யாழ்.நகரில் உள்ள அருமை போசனசாலைக்கு வேலை ஆட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இல 10,10 ஜீம்மா பள்ளிவாசல் ஒழுங்கை எனும் முகவரிக்கு நேரில் வரவும்

Cipla - Citihealth எனும் மருந்துப் பொருட்கள் நிறுவனத்திற்கு யாழில் வெளிக்கள ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு ஆள்தேவை. ஆர்வமுள்ளவர்கள் நாளை காலை 9 மணிமுதல் வனிக்கா மெடிக்கல்ஸ், இல 85, ஆஸ்பத்திரி எனும் முகவரிக்கு நேர்முகத் தேர்விற்கு சமூகம் தரவும்.

மீரோ மின்சார தராசு விற்பனைக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் சுதா காட்சியறை, இல.62, திருநெல்வேலிச்சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வரவும். மேலதிக விபரங்களுக்கு 0777630752, 0772383399 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ள, பழக விரும்பும் விற்பனையாளர் (ஆண்கள் மட்டும்) தேவை. ஆர்வமுள்ளவர்கள் த.குமாரசாமி அன் சன்ஸ் 248/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

யாழ்.நகரில் அமைந்துள்ள பிரபல Tile ஸ்தாபனத்திற்கு Store Keeper, Marketing பிரதிநிதி மற்றும் வாகனச் சாரதி தேவை. யாழ்.நகரில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. நெல்லியடியில் திறக்கப்படவுள்ள கிளை நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை வடமராட்சிப்பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது ஆர்வமுள்ளவர்கள் suren@metrohomes.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

அலுவலகம் ஒன்றில் தமிழ், ஆங்கிலம் தட்டச்சு செய்யக்கூடிய கணினித் தட்டெழுத்தாளர் ஒருவர் தேவை. ஆற்றலும் ஆர்வமும் உளளவர்கள் 0775440293, 021 3215081 இற்குத் தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வர்த்தக முகாமையாளர் பதவிக்கு ஆள்தேவை ஆற்றலும்,தகுதியும், ஆர்வமும் உடையவர்கள் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணபத்தினை தலைமைக்காரியாலத்தில் பெற்று 27.10.2011 இற்கு முன்னதாக தலைவர் 127,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் குறிப்பு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் என எழுதப்படவேண்டும்.

திருநெல்வேலிச் சந்தையில் இயங்கும் கண்ணன் ஸ்ரோர்ஸ் இற்கு சமையல் ஆள் விற்பனை உதவியாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 07777 69231, 077 38677712 இற்கு தொடர்பு கொள்ளவும்.


கல்வி நிலையம் ஒன்றிற்கு ஆங்கில ஆசிரியர் தேவை. ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் 077 1518354,0779595765 இற்குத் தொடர்பு கொள்ளவும்.

பகுதி நேரமாக பணி செய்யக்கூடிய இலத்திரனியல் தொழில் நுட்பவியலாளர் தேவை. பழுது பார்த்தலில் 3 வருட அனுபவமுள்ளவர்கள் மட்டும் North Lead Computer sales Service Ceter 0212224459, 0772533390 என்ற இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.

Elephant house இல் ஐஸ்பழ வியாபாரம் செய்வதற்கு முச்சக்கர வண்டிச் சாரதிகள் தேவை. தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் 077708861, 0779910154, 0214918407 இற்குத் தொடர்பு கொள்ளவும்.

ஆசைப்பிள்ளை அன் சன்ஸ் நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ஆண் காவலாளி தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0777578883 இற்குத் தொடர்பு கொள்ளவும்.


பருத்தித்துறை ராஜா சுவைச்சோலைக்கு வேலைக்கு ஆட்கள் (இருபாலாரும்) தேவை. தேனீர் தயாரிப்பாளர், ரொட்டி தயாரிபபாளர், சாப்பாடு பரிமாறுபவர், சமையலாளர் (பெண்) ஆர்வமுள்ளவர்கள் 0779605260 இற்குத் தொடர்பு கொள்ளவும்.

வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழாவின் 2 ஆம் நாள் நிகழ்வின் முதல் ஆய்வரங்க நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் வித்துவான் ரகுமான் அரங்கில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் காணலாம்.

# சட்டத்தின் ஓட்டையை வெளிப்படையாக முல்லேரியா சம்பவம் காட்டுகின்றது

## – என்கிறார் அரியநேத்திரன் –



(கொழும்பு)

வடக்கு - கிழக்கிற்கு ஒரு சட்டமும், நாட்டிலுள்ள ஏனைய பிரதேசங்களுக்கு ஒரு சட்டமும் நடைமுறையில் உள்ளதை முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மிகவும் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது. முல்லேரியாவில் இடம்பெற்ற சம்பவம் போன்று வடக்கு-கிழக்கில் ஏதாவதொரு சம்பவம் இடம் பெற்றிருந்தால் அரசாங்கம் கண், வாய், மூக்கு வைத்து அதனை வேறு விதமாக திசை திருப்பி விசமத்தனமான பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவினதும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தொழிற்சங்கங்கள் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஷ்மனின் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவமானது ஆளும் கட்சியிலுள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், தொகுதி அமைப்பாளர்கள் யாவரும் ஆயுதக் குழுக்களை வைத்துக் கொண்டு சுதந்திரமாக நடமாடித் திரிவதை வெளிப்படைத் தன்மையாக பறைசாற்றுகின்றது.

அரசாங்கம் சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றை பொலிஸ் நிலையங்களில் அல்லது படை முகாம்களில் ஒப்படைக்குமாறு பல தடவை அறிவித்தல்களை வழங்கி காலக்கெடுக்களை விதித்திருந்தது. இந் நிலையில் முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட குழுக்களுக்கு எங்கிருந்து ஆயுதம் வழங்கப்பட்டது. இது பற்றி அரசாங்கம் பகிரங்கப்படுத்தவேண்டும்.

இதிலிருந்து ஒரு விடயம் தெளிவாகத் தெரிகின்றது. ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் செல்லும் போது மக்கள் அவர்களுடன் செல்ல அச்சமுற்றுள்ளமையாகும்.

இச் சம்பவத்தில் இறந்தவரும், சுட்டவரும் அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்கு மிக்கவர்கள் என்பதால் நிச்சயமாக குற்றம் செய்தவர் தப்பித்துக் கொள்ள வாய்ப்புக்கள் உள்ளது. இத்தகைய சம்பவம் வடக்கு, கிழக்கில் இடம் பெற்றிருந்தால் நிலைமை என்னவாகும் என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# மண் மேடு சரிந்து வீழ்ந்து 4 வயதுச் சிறுவன் மரணம்

(கொழும்பு)

தலவாக்கலை லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்னகிரி தோட்டத்தில் மண் மேடொன்று சரிந்து வீழ்ந்ததில் நான்கு வயதுச் சிறுவனொருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது

ஆறுமுகம் சுகுமார் (வயது 4) என்ற சிறுவனே இவ்வாறு உயிழந்தவர் ஆவார்.

லிந்துலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை காரணமாக திடீரென மண்மேடு சரிந்து விளையாடிக்கொண்டிருந்த சிறுவனின் மீது வீழ்ந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் லிந்துலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நகரசபை உபதலைவர் பதவியை இராஜினாமாச்செய்தார் சிவாஜிலிங்கம்

(கொழும்பு)



வல்வெட்டித்துறை நகரசபை உப தலைவர் பதவியிலிருந்து கே.சிவாஜிலிங் கம் இராஜினாமா செய்துள்ளார். தனது இராஜினாமாக் கடிதத்தை தேர்தல் ஆணையாளருக்கும், தமிழரசுக் கட்சி செயலாளர் மாவை சேனாதிராசாவுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

தனக்கு தலைவர் பதவி தரவேண்டும் எனக் கோரி வந்த சிவாஜிலிங்கம் தலைவர் பதவி இல்லை என்றால் உப தலைவர் பதவி தனக்குத் தேவையில்லை என்றும் கூறியே இராஜினாமா செய்துள்ளார்.

உப தலைவர் பதவியை இராஜினாமா செய்திருக்கும் சிவாஜிலிங்கம் நகரசபை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ய வில்லை என தெரியவருகிறது. கடந்த நகரசபைக் கூட்டத்திற்கு அவர் சமூகமளித்திருந்தார்.

இதேவேளை வல்வெட்டித்துறை நகரசபை உப தலைவர் பதவிக்கு புதிய ஒருவர் நியமிக்கப்படுவார் என்று தமிழரசுக்கட்சிச் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

# துமிந்தவின் மூளை ரவையை அகற்ற அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் வருகை



(கொழும்பு)

சிறி ஜெயவர்த்தனபுர மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு சிகிச்சையளிக்க அமெரிக்காவைச் சேர்ந்த இரண்டு நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்கள் கொழும்புக்கு வரவுள்ளனர்.

முல்லேரியா துப்பாக்கி மோதலில் படு காயமடைந்த துமிந்த சில்வாவின் தலையில் இருந்து, நான்கு மணி நேர சத்திர சிகிச்சையின் பின்னர் இரண்டு துப்பாக்கி ரவைகள் அகற்றப்பட்டிருந்தன. ஒரு ரவை மண்டையோட்டில், மூளைக்குப் பின்புறமாக செருகியுள்ளதால் அதனை அகற்ற முடியாதுள்ளது. அவர் குணமடைந்து வருவதாக மருத்துவர்கள் கூறினாலும், மூன்று மாதங் களுக்கு மருத்துவமனையிலேயே தங்கியிருக்க நேரிடு[illegible] என்று கூறப்படுகிறது.

மூளைப் பகுதியைத் தாக்கிய துப்பாக்கி ரவையை மண்டையோட்டில் இருந்து அகற்று வதற்கு இரண்டு அமெரிக்க நரம்பியல் நிபுணர்களை கொழும்புக்கு அழைத்துவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இவர்கள் இருவரும் சிங்கப்பூர் மருத்துவமனையொன்றில் பணியாற்றி வருகின்றனர்.

துமிந்த சில்வாவை சிங்கப்பூர் கொண்டு சென்று சிகிச்சை அளிக்கவே அவரது குடும்பத்தினரும், பாதுகாப்புசெயலர் கோத்தாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் விரும்பினர். ஆனால் சிறி ஜெயவர்த்தனபுர மருத்து வமனை மருத்துவர்கள் அதற்கு அனுமதியளிக்க மறுத்துள்ளனர்.

துமிந்த சில்வாவின் உடல் நிலை வேறெங்கும் கொண்டு செல்லத் தக்க நிலையில் இல்லை என்றும், அவ்வாறு கொண்டு செல்வதால் உயிரா பத்து ஏற்படலாம் என்றும் மருத்துவர்கள் எச்சரித்துள்ள நிலையிலேயே சிங்கப்பூரில் இருந்து அமெரிக்க மருத்துவ நிபுணர்களை அரசாங்கம் கொண்டு வரவுள்ளது.

# நீர்மின் உற்பத்தி நிலையத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் இடை நிறுத்தப்பட்ட இங்கினியாங்கல நீர் மின் உற்பத்தி நிலைய நடவடிக்கைகளை மீண்டும் ஆரம் பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இந்தத் திட்டத்திற்கான நிதி உதவியினை செக் குடியரசு வழங்க முன் வந்துள்ளது. பிரதமர் டி.எம். ஜயரட்னவிற்கும் செக் குடியரசின் வர்த்தக அமைச்சர் மார்ட்டின் கொக்கோரெக்கிற்கும் இடையே இடம்பெற்ற பேச்சு வார்த்தையினை அடுத்து, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.இங்கினியாங்கல நீர் மின் உற்பத்தி நிலைய முதல் கட்ட நிர்மாண நடவடிக்கைகளுக்கு 3 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மின் நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், அந்தப் பிராந்தியத்தின் மின்சார தேவை யின் பெரும் பகுதியினை இந்த நிலையத்தின் ஊடாகப் பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது இது தவிர, கொழும்பு மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் சுற்றாடல் மாசுபடுவதை தடுப் பதற்கான பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க செக்குடியரசு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரஜாவுரிமை வழங்கும் நடமாடும் சேவை

கடந்தகால யுத்தம் காரணமாக இந்தியா சென்று அங்கு பிறந்த குழந்தைகள் இலங்கை வந்த நிலையில் அவர்களுக்கு பிரஜாவுரிமை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இந்த நடமாடும் சேவை வவுனியா பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்டது

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய பலர் தமது பிள்ளைகளுக்கான பிரஜாவுரிமையை பெற்றுக்கொள்வதற்காக வந்திருந்தனர். இதன்போது குடியகழ்வு மற்றும் குடிவரவு திணைக்கள அதிகாரிகளும் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றிய மக்களுக்கு பிரஜாவுரிமையை பெற்றுக்கொள் வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தனர்.

வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் ந.திருஞானசம்பந்தர், குடியகழ்வு மற்றும் குடிவரவு திணைக்களத்தின் உயரதிகாரிகள், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கால்நடை கூட்டுறவுச் சங்க கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலகத்தினூடாக கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க கட்டடம் அமைப்பதற்கு 26 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் நா.மகேந்திரம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை 13 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலர் செ.சத்தியசீலன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கூட்டுறவுச் சங்கத்திற்கான கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கால்நடை அபிவிருத்தி மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் வருகைதந்திருந்தார்.

கால்நடை அபிவிருத்தி தொடர்பாக கூட்டத்தில் ஆராய்ந்த அமைச்சர், 10 பயனாளிகளுக்கு நல்லின காளை மாடுகளும், 20 பயனாளிகளுக்கு 5 ஆயிரம் கோழிக்குஞ்சுகளும் வழங்கியதுடன், கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கான நிதி ஒதுக்கீடுகளும் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கட்டடம் அமைப்பதற்கான காணி நாவலர்மடம், கரணவாய் கிழக்குப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பிப்பதற்கு கேள்விகள் கோரப்பட்டுள்ளதெனவும் மிக விரைவாக கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் மற்றும் பயனாளிகள் பயன்பெறும் வகையில் இவ்வருட இறுதிக்குள் கட்டடம் கட்டி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் சங்கத் தலைவர் தெரிவித்தார். (116)

# வரலாற்றுப் பரீட்சையில் சித்தியடைந்தால் விஸா

(கொழும்பு)

பிரித்தானியக் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள விரும்பும் ஒருவர் பிரித்தானிய வரலாறு மற்றும் கலாசாரம் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என அந்நாட்டு அரசாங்கம் புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவிற்குள் நுழையும் குடியேற்ற வாசிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்காகவே இந்தப் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் பிரித்தானியாவுக்கு அதிக எண்ணிக்கையான மக்கள் வருவதாகவும், அவர்களின் வரவுகளை மட்டுப்படுத்துவதற்காகவே இந்தக் கட்டுப்பாட்டுச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐரோப்பாவிற்கு வெளிப்புறத்தே உள்ள பொருளாதார குடியேற்ற வாசிகளின் எண்ணிக்கையை மேலும் குறைந்த மட்டத்திற்கு கொண்டுவருவதை உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது எனக் குறிப்பிட்ட டேவிட் கமரூன்,

சட்டவிரோதமான குடியேற்ற வாசிகளின் விபரங்களைக் கையாள்வதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசியல் பிரச்சினைகள் உருவாகி விடும் என்றும், போலித் திருமணங்களை இல்லாமல் செய்வதன் மூலம் சட்டவிரோத குடியேற்றவாசிகளின் வருகையை மேலும் கட்டுப்படுத்தமுடியும் என்றும் கூறினார்.

# அரசியல்வாதிகள் கைகலப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் செல்வாக்கு மிக்க அரசியல்வாதியொருவரின் வீட்டில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற சந்திப்பின்போது மத்திய மாகாண சபையைச் சேர்ந்த இருவருக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலை நிறுத்த முயன்ற மற்றொரு மாகாண சபை உறுப்பினரும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். மாகாண சபை உறுப்பினர்கள் பலர் இம்மோதலை முடிவுக்கு கொண்டுவர முயன்றனர். எனினும் தாமாக மோதல் நிறுத்தப்பட்டது. சபை உறுப்பினர்கள் பலரின் குடும்ப அங்கத்தவர்கள் முன்னிலையில் இம்மோதல் இடம்பெற்றுள்ளது.

## உள்ளூர் அழைப்பாணை...

கோரும் அழைப்பாணை அலரி மாளிகைக்கு அனுப்பப்பட்ட போதும் அதனை ஏற்க அங்குள்ள அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

அமெரிக்கச் சட்டத்தின் படி, இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தனக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பாணை குறித்து அறிந்திருக்க வேண்டும்.

இதனால், இலங்கையில் உள்ள இரண்டு ஊடகங்கள் மற்றும் தமிழ்நெற் இணையத்தளம் ஆகியவற்றின் மூலம் அழைப்பாணையை வெளியிட அமெரிக்காவின் கொலம்பியா மாவட்ட நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது.

இந்த நிலையிலேயே, அமெரிக்க நீதிமன்றத்தின் அழைப்பாணை உள்ளூர் ஊடகங்களில் வெளியிடப்பட்டாலும் கூட, அதற்குப் பதில் அளிக்கப்படாது என்று பிரதி சொலிசிற்றர் ஜெனரல் ஜெயந்த ஜெயசூரிய தெரிவித்துள்ளார். வலுவான காரணமின்றி அழைப்பாணை விடுக்கப்பட்டிருக்கும் போது அதற்கு ஜனாதிபதி பதிலளிக்க வேண்டியதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் சட்டமா அதிபரும் அமைச்சரவையின் மூத்த சட்ட ஆலோசகருமான மொகான் பீரிஸ், ஜனாதிபதிக்கு இராஜதந்திர விதிவிலக்கு இருப்பதால், அமெரிக்க நீதிமன்ற அழைப்பாணை உள்ளூர் ஊடகங்களில் வெளியிடப்பட்டாலும் கூட அதற்குப் பதிலளிக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது இலங்கையின் சட்டமா அதிபராக இருந்த மொகான் பீரிஸ், ஜனாதிபதியின் செயலகத்துக்கோ அல்லது வதிவிடத்துக்கோ எந்தவொரு அழைப்பாணையும் கிடைக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

## எத்தனை நாட்களுக்கு...

கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாம் தேர்தலுக்கு மக்களிடம் செல்லும் போது ஒற்றுமையை பற்றி பேசுகின்றோம். உணர்வுபூர்வமாக எமது உரிமைக்காக, விடுதலைக்காக ஒன்றுபடுங்கள் ஐக்கியப்படுங்கள் என மேடைகளில் பேசி வரும் நாம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அந்த ஒற்றுமையை கட்டிக்காக்கின்றோமா என்றால், அதில் நாம் தோல்வி அடைந்திருக்கின்றோம் தோல்வி அடைந்து வருகின்றோம் என்றே கூற வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மத்தியிலும் ஒற்றுமையின்மை இருந்து வருகின்றது. நாம் இதனை நிவர்த்தி செய்தேயாக வேண்டும். இல்லையேல் எந்த தீர்வையும் தமிழ் மக்களுக்கு எம்மால் பெற்றுக்கொடுக்க முடியாது போய் விடும்.

விடுதலைப் போராட்டமாக இருந்தாலும் சரி அபிவிருத்தி வேலைத் திட்டமாக இருந்தாலும் சரி எமது மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது.

மக்கள் எம் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் காத்துக்கொண்டிருக்கும் நிலையில் தொடர்ந்தும் நாங்கள் துரோகம் செய்ய முடியாது. இவற்றை நிவர்த்தி செய்யவேண்டுமாக இருந்தால் ஒவ்வொரு சபைக்குரிய உறுப்பினர்களை இதே மாதிரியான இடங்களுக்கு அழைத்து வந்து அவர்களது கருத்துக்களையும் கேட்பதோடு எமது கட்சியை வளர்க்கும் பணியாக கட்சிக்குள் இருக்கும் குறைபாடுகளையும் உறுப்பினர்களுக்கிடையில் இருக்கும் குறைபாடுகளையும் கேட்கும் அரங்கம் ஒன்றினை தலைவர்கள் உருவாக்க வேண்டும்.

எமது பிரச்சினைகளை தீர்க்க முடியாத நிலையில் நிச்சயமாக ஒட்டுமொத்த தாயக பிரதேச மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியாது என்றார்.

## பாதுகாப்பு....

முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துக்கொண்டனர். அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கொள்ளை, கப்பம் மற்றும் போதை மருந்து வகைகளின் விற்பனை போன்றவற்றை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதுடன் அதற்கு சகலரது ஒத்துழைப்பும் அவசியம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

என்னிடம் யார் வந்து பாதுகாப்பு கோரினாலும் அதற்கான இறுதி முடிவை நானே எடுப்பேன். இது தொடர்பில் யாரும் என்னை விமர்சிக்க முடியாது. கொலன்னாவில் இடம்பெற்ற துரதிஷ்டவசமான சம்பவம் போன்று இனியும் நடக்கக்கூடாது என்றும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

## புலிகளைத்...

எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பின் போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நோர்வேக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அந்நாட்டு முக்கிய அரசியல்வாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் நிமால் சிறிபாலவுடன், அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவும் இணைந்து கொண்டுள்ளார்.

நல்லிணக்க நடவடிக்கைகளின் போது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடாது என அமைச்சர் நிமால் சிறிபால கோரிக்கை விடுத்துள்ளார்.

நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச...

அமெரிக்காவுடன் வழக்கமான இந்த உறவைப் பேணும் இலங்கை சீனாவுடன் வலுவான உறவுகளை ஏற்படுத்தி வருகிறது.

சீனக் கடற்படையுடனான கூட்டுப் பயிற்சி மற்றும் மேலதிக கடற்படைப் பயிற்சிகள் என்பன இலங்கை கடற்படையின் ஆற்றலை மேம்படுத்த உதவும் என்று இலங்கை கடற்படைப் பேச்சாளர் கூறியதாகவும் கொழும்பு ஆங்கில வார இதழ் தெரிவித்துள்ளது.

## இராஜதந்திர...

திணைக்களம் சவேந்திர சில்வாவுக்கு இராஜதந்திரி அந்தஸ்தை வழங்கியது.

இதனையடுத்து இராஜாங்க திணைக்களத்தின் இராஜதந்திர தன்மைக்கான அறிக்கையையும் இணைத்து சவேந்திர சில்வாவின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் எதிர்மனுவை கடந்த வாரம் தாக்கல் செய்துள்ளனர்.

## யாழ். பல்கலை....

தெரியவருவதாவது, தனது தனிப்பட்ட தேவை நிமித்தம் நண்பர்களுடன் ஒரு கலந்துரையாடலில் கலந்துகொள்வதற்காக சென்ற அவர் அந்த நிகழ்வு முடிந்ததும் தனியே தனது மோட்டார் சைக்கிளில் இருப்பிடம் நோக்கி பயணமாகியுள்ளார்.

அவ்வேளை திடீரென இவரை வழிமறித்த மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத குழுவினர் "தனிநாடு வேண்டுமா", இவனைக் கொன்றால்தான் பல்கலைக்கழகம் நல்லா இயங்கும் எனக்கூறி தாறுமாறாக பொல்லுகள் மற்றும் இரும்புக் கம்பிகளால் தாக்கியுள்ளனர். தாக்குதலில் நிலைகுலைந்த அவர் பிரதான வீதியை நோக்கி சத்தமிட்டவாறு ஓடியுள்ளார்.

அவ்வேளை பொதுமக்கள் அவ்விடம் கூடவே தாக்குதல் நடத்திய நபர்கள் தப்பிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தால் தலை மற்றும் உடலில் பலத்த காயமடைந்த அவர் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் தாக்குதல் மேற்கொண்டவர்களால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. இதேவேளை இச்சம்பவத்தைக் கண்டித்து இன்று விரிவுரையைப் புறக்கணிக்க அனைத்து மாணவர் சங்கங்களும் தீர்மானித்துள்ளன. (எப்.எஸ்)

## நியாயம் குறித்த....

அத்தகைய சம்பவம் இடம்பெற்றிருந்தது.


தற்போது அரசாங்கத்தின் அரசியல்வாதிகளும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொள்கின்றனர். இன்று மக்கள் மத்தியில் நியாயம் தொடர்பான எந்தவொரு எதிர்ப்பார்ப்பும் கிடையாது. பொலிஸார் சுயாதீனமாக செயற்பட வில்லை பொலிஸாரை பயன்படுத்திக்கொள்வதாகவே கூறுகின்றனர். அது உண்மையென பொலிஸில் உள்ளவர்களே கூறுகின்றனர்.

பொலிஸ் மா அதிபரால் அதிகாரிகளை கட்டுப்படுத்த முடியாதென்றால், அதிகாரிகள் மற்றவர்களை அனுப்புவார்களாயின் அங்கு என்னதான் நடக்கின்றது. சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்பாக எந்தவொரு நம்பிக்கையும் கிடையாது. நீதியும் நியாயமும் அங்கு கிடைப்பதில்லை நீதியை நிலைநாட்டுவதில் பாரிய பிரச்சினை நிலவுகிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழு இயங்குவதில்லை அனைத்து இடங்களிலும் இலஞ்சம் பெறுகின்றனர் அதனை கண்டுப்பிடிக்க முடியவில்லை ஊடகங்கள் ஒடுக்கப்பட்டுள்ளன. இப்படியான சமூகத்தில் வாழ்வதற்கு விரும்புகின்றீர்கள். 17 ஆவது திருத்தம் நீக்கப்பட்டால் இந்த நிலை ஏற்படுமா என நாம் அன்று கூறியபோது அநேகமானவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் தெரிவித்தார்.

### செய்திப்பாணம்

**சட்டத்தை கையெடுத்தல் சகட்டுமேனி நடக்கையில்**
**பட்டறிவைத் தற்கொலையில் பார்க்கிறோம் - திட்டமிடும்**
**வாழ்க்கையை திறம்படவாம் வடிவமைத்துக் கொண்டாலே**
**பாழ்வழிப் பாதையேன் போ!**



# ஜே.வி.பி.யின் 90 வீத அதிகாரம் தம்வசம் என்கிறது கிளர்ச்சிக் குழு

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் அதிகாரத்தில் தற்போது, 90 வீதத்தை தமது அணி கைப்பற்றியுள்ளதாக ஜே.வி.பி.யின் கிளர்ச்சிக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சோமவன்ச அமரசிங்க, ரில்வின் சில்வா, அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட மத்திய செயற்குழுவின் குறைந்தளவான எண்ணிக்கையினர் கையில் இருக்கும் ஜே.வி.பி. அடுத்த சில தினங்களில் முற்றாக எதிரணியினரிடம் சென்று விடும் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஜே.வி.பி.யின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக 5 கட்டங்களாக நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் தற்போது, அதில் நான்கு கட்டிடங்கள் பூர்த்தியாகி இருப்பதாகவும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

சோமவன்ஸ, ரில்வின் சில்வா, அனுரகுமார திஸாநாயக்க, லால்காந்த உள்ளிட்டவர்கள் ஊடகங்கள் மூலம் பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்திய போதிலும், தாம் மேற்கொண்ட நான்கு கட்ட நடவடிக்கைகள் மூலம் அந்தப் பொய்கள் தோற்கடிக்கப்பட்டுக் கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் தமது அணியினர் நன்மதிப்பை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் கிளர்ச்சிக் குழுவின் பேச்சாளர் கூறியுள்ளார்.

கட்சியின் அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்றுவதற்காக கிளர்ச்சிக் குழுவினர் 5 ஆவது கட்டமாக கொழும்பில் பாரிய மாநாடு ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

உண்மையான இடதுசாரி அரசியல் கொள்கைகளை வேண்டி நிற்கும் ஜே.வி.பி.யின் உறுப்பினர்களின் பெருபான்மையானவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார்கள் எனவும் குறித்த பேச்சாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்

## உலக உணவு தினமான நேற்று மாணவர்களின் உணவு நஞ்சானது



(தலாவாக்கலை)

உலக உணவு தினமான நேற்று, தலவாக்கலை பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் பரிமாறப்பட்ட உணவு விஷமானதால் பெற்றோர், பாடசாலை மாணவர்களெனப் 200 இற்கும் மேற்பட்டோர் நோய்வாய்ப்பட்ட நிலையில் வட்டகொட, நுவரெலியா, லிந்துலை மற்றும் கொட்டகலை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் தினத்தை கொண்டாடுமுகமாக அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் நேற்றுத் தலவாக்கலைப் பகுதியிலுள்ள பல பாடசாலை மாணவர்களுக்கு உணவு விநியோகிக்கப்பட்டது.

இவ்வாறு விநியோகிக்கப்பட்ட உணவை உட்கொண்ட பின்னரே மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தலவாக்கலை தமிழ் வித்தியாலயத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது

## இலங்கையர்கள் அனைவருக்கும் தேசிய இலத்திரனியல் பதிவு

(கொழும்பு)

இலங்கையர்கள் அனைவரினதும் விபரங்களை உள்ளடக்கிய தேசிய இலத்திரனியல் பதிவு ஒன்றை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்ளவுள்ளது. இதற்காக 14.5 பில்லியன் ரூபாய்கள் செலவிடப்படவுள்ளன. இலங்கையில் நடைமுறையில் உள்ள தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக அனைத்து இலங்கையர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் அடையாள அட்டை தொடர்பான தகவல் கடந்த ஜூலை மாதத்தில் அரசாங்கம் அறிவித்தல் ஒன்றை விடுத்திருந்தது. நாட்டின் எதிர்கால பாதுகாப்பு கருதி இந்த திட்டம் அமுல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையர் ஒருவர் தொடர்பில் சில நிமிடங்களுக்குள் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

## எனது உத்தரவுகளைப் பொலிஸார் உதாசீனம் செய்து செயற்பட்டனர்

### என்கிறார் தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

பொலிஸர் தமது உத்தரவுகளை உதாசீனம் செய்து செயற்பட்டதாக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். தேர்தல் தினமன்றும் அதற்கு முன்னரும் தமது உத்தரவுகளை பொலிஸார் பின்பற்றத் தவறியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் குறிப்பாக தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களினால் முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக தாம் சில உத்தரவுகளைப் பிறப்பித்தபோதிலும் பொலிஸார் அவற்றை உதாசீனம் செய்து செயற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் பிரசாரக் காலம் நிறைவடைந்ததன் பின்னரும் அரசியல் கூட்டங்களும், பிரசார நடவடிக்கைகளும் தொடர்ச்சி யாக முன்னெடுக்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொலன்னாவ பிரதேசத்தின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு தாம் விடுத்த கோரிக்கையை பொலிஸார் ஏற்றுக் கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அவரது ஆதரவாளர்களும் தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபடுவதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாகத் தெரிவித்துள்ளார்.

தமது உத்தரவுகளை பொலிஸார் ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுத்திருந்தால் முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை தடுத்திருக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பாரத லக்ஷ்மன் கொலை குறித்த விசாரணையில் திருப்தி இல்லை

கடந்த 8 ஆம் திகதி, தேர்தல் தினத்தன்று கொலன்னாவ பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச் சந்திரனின் மரணம் தொடர்பில் நடத்தப்படும் விசாரணைகள் குறித்து தமது குடும்பம் திருப்தியடையவில்லையென்று அவரது சகோதரி சுவர்ணா குணரத்ன பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

தலையில் படுகாயமடைந்து இன்னும் சிகிச்சைபெற்றுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா இந்தக் கொலைச் சம்பவத்தில் ஒரு சந்தேகநபர் அல்லவென்று இலங்கையின் பாதுகாப்பு தொடர்பான பேச்சாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல பி.பி.சி.க்கு அண்மையில் கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மனின் சகோதரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வாவே பாரத லக்ஷ்மனை கைத்துப்பாக்கியால் சுட்டதாக, பாரத லக்ஷ்மனின் வாகனச் சாரதி பொலிஸாருக்கு அளித்துள்ள வாக்குமூலம் நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், துமிந்த சில்வாவை சந்தேக நபர் அல்லவென அரசின் உயர் அதிகாரி கூறியுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் சுவர்ணா குணரத்ண கூறினார்.

## கலகத் தடுப்பு பொலிஸாரை தயாராக வைக்க உத்தரவு

நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையங்களிலும் கலகத் தடுப்பு பொலிஸாரைத் தயாராக வைத்திருக்குமாறு பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் காணப்பட்ட கலகத்தடுப்பு பிரிவின் குறைப்பாடுகளைக் களையும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ் பரிசோதகர், இரண்டு சார்ஜன்ட்டுகள் உட்பட 16 பேர் கொண்ட கலகத் தடுப்புப் பொலிஸ் பிரிவுகளை ஏற்படுத்துமாறும், அவர்களுக்கு தேவையான உபகரணங்களை பெற்றுக்கொடுக்குமாறும் பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## புளொட் உறுப்பினர் மீது வவுனியாவில் வாள் வெட்டு

இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டில் புளொட் இயக்க உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா அரசவாடிக்கு குறிப்பிட்ட உறுப்பினர் மது அருந்தச் சென்றிருந்தபோது மோட்டார் சைக்கிள் ஒன்றில் தலைக் கவசங்கள் அணிந்து அங்கு சென்ற இருவர் இவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்.

வெட்டுக்காயங்களுக்கு உள்ளான நபர் நெடுமாறன் என அழைக்கப்படுபவர் எனவும் கடந்த காலங்களில் வவுனியாவில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் பலவற்றுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பெயரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விடுதலையான நிலையில் அவர் மீது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது

## கொலைச் சந்தேக நபர் துமிந்த இல்லையாம்

(கொழும்பு)

கொலன்னாவ பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் தொழிற்சங்க ஆலோசகருமான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபராக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா காணப்படவில்லை என, இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பாதுகாப்புத்துறை பேச்சாளரான லக்ஷ்மன் ஹுலுகலல தெரிவித்துள்ளார். பி.பி.சி. சிங்கள ஒலிபரப்பான சந்தேஷியவுக்கே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முல்லேரியா துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் பாரதவின் மீது துமிந்தவே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் என பாரதவின் சாரதி குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு வாக்குமூலம் அளித்திதுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது

## தொம்பே தாக்குதல் மேலும் ஐவர் கைது

(கொழும்பு)

தொம்பே பொலிஸ் நிலையம் மீதான தாக்குல் தொடர்பில் மேலும் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் கூறினர்.

இந்த சம்பவம் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் பொலிஸாரும் கைது செய்த 34 பேர் ஏற்கனவே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்த இளைஞன் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து தொம்பே பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் சிலர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## விரிவுரையாளர் பிரச்சினைக்கு பட்ஜெட்டில் நிரந்தரத் தீர்வு தேவை



பல்கலைக்கழக விரிவுரையாளர்களது பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான திட்டங்கள் இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டுமென்று பல்கலைக்கழக விரிவுரையாளர்களது சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் சலுகை தற்காலிகமானது என விரிவுரையாளர் மஹிம் மெண்டிஸ் தெரிவித்தார்.

இம்முறை வரவுசெலவுத் திட்டத்திலும் விரிவுரையாளர்களுக்கான உரிய தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படாவிடில் பல்கலைககழகத்தினுள் மீண்டும் பிரச்சினைகள் பாரிய அளவில் தலைதூக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சஜித்தின் கட்சி உறுப்புரிமையை ரத்துச் செய்ய ஐ.தே.க.திட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கட்சி உறுப்புரிமையை ரத்து செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவாக செயற்பட்டு வரும் நான்கு உறுப்பினர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை என கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீலால் லக்திலக்க குறிப்பிட்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.